


Follow us:

# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 245 சோபகிருது வருடம், வைகாசி மாதம் 18ஆம் திகதி வியாழக்கிழமை
(01.06.2023) ஹிஜ்ரி 1444, துல்கஃதா - 11, 0115 886187 - பக்கங்கள் 10

விலை ரூ.50






# டெங்கு அபாய நிலைமை!

## 60 சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுகளுக்கு தொடர்ந்தும் சிவப்பு எச்சரிக்கை

•நா.தினுஷா

நாட்டிலுள்ள 60 வரையான சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுகளுக்கு விதிக்கப்பட்டிருந்த டெங்கு சிவப்பு எச்சரிக்கை தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளதாகவும் இந்த நிலைமை நீடித்தால் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கான அபாயம் இருப்பதாகவும் சுகாதாரப் பிரிவு நேற்று (31) எச்சரிக்கை விடுத்துள்ளது.

மேலும், நாளொன்றுக்கு 868 வரையான நோயாளர்கள் பதிவாகிறார்கள்.

கொழும்பு தேசிய வைத்தியசாலை, ஐ.டி.எச். வைத்தியசாலை, நீர்கொழும்பு பொது வைத்தியசாலை, கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை, கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலை ஆகியவற்றிலேயே அதிக எண்ணிக்கையிலான நோயாளர்கள் பதிவாவதாகவும் தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவின் வைத்தியர் லஹிரு கொடிதுவக்கு தெரிவித்தார். 02 பக்கம்

| மாதம் | தொகை |
|---|---|
| மே | 9,290 |
| ஏப்ரல் | 7,617 |
| மார்ச் | 6,419 |
| பெப்ரவரி | 6,709 |
| ஜனவரி | 8,963 |
| உயிரிழப்பு | 25 |

### தொற்றா நோய்களின் பரவல் அதிகரிப்பு

# சர்க்கரை, உப்பு, கொழுப்பு உணவுகளில் அவதானம்

நாட்டில் தொற்றா நோய்களின் பரவல் அதிகரிப்புக் காரணமாக சர்க்கரை, உப்பு, கொழுப்பு உணவுகளை உட்கொள்வதில் அவதானம் தேவையென சுகாதாரத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளதுடன் பெற்றோர் தமது குழந்தைகளின் போஷாக்கு குறித்து அக்கறைகொள்ள வேண்டுமெனவும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

குறிப்பாக சந்தையில் விற்கப்படும் குளிர்பானங்கள் ஆபத்தை விளைவிக்கலாமென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் போஷாக்குப் பிரிவு பணிப்பாளரும் விசேட வைத்திய நிபுணருமான லக்மினி நயனா மகோதரத்ன ஊடகங்களுக்கு நேற்று (31) கருத்துத் தெரிவிக்கையில் இந்த விடயங்களைக் குறிப்பிட்டார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது, 02 பக்கம்

# தடுப்பூசிக்கு தட்டுப்பாடு

## பன்றிகளில் வேகமாக பரவும் வைரஸ்



பன்றிகளிடையே ஒருவகை வைரஸ் நோய் வேகமாக பரவி வருவதாக கண்டறியப்பட்டுள்ள போதிலும் அவற்றுக்கான தடுப்பூசிகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக தெரிவிக்கப்படுகிறது.

பன்றிகளிடையே பரவிவரும் வைரஸானது மேல் மாகாணத்திலுள்ள 4 பண்ணைகளில் கண்டறியப்பட்டுள்ளதாக மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம் தெரிவித்துள்ளது.

நோய்த் தொற்று காணப்படும் பண்ணைகளில் இருந்து பன்றிகளை வெளியே கொண்டு செல்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக திணைக்களத்தின் பணிப்பாளர் கே. கே. சரத் தெரிவித்துள்ளார். இந்த வைரஸ் தொற்று இதற்கு முன்னரும் நாட்டில் பதிவாகியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், இந்த வைரஸ் மனிதர்களுக்கு பரவாது என மேல் மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் பணிப்பாளர் குறிப்பிட்டுள்ளார். 02 பக்கம்

# மின்சார சபைக்கு மறுசீரமைப்புத் திட்டம்



## இம்மாத இறுதிக்குள் அறிமுகம்

•நா.தினுஷா

இலங்கை மின்சார சபையின் சொத்துகள், பொறுப்புகளை செய்வதற்கான திட்டமொன்றை இம்மாத இறுதிக்குள் அறிமுகப்படுத்த எதிர்பார்த்துள்ளதாக மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

மின்சார சபையின் சொத்துகள், பொறுப்புகளை மறுசீரமைப்பது தொடர்பான கலந்துரையாடலொன்று சர்வதேச நாணய நிதியம்,... 02 பக்கம்

# யூரியா விலை குறைப்பு ஜூன் 15 இல் அமுல்



அரசாங்கத்துக்குச் சொந்தமான இரண்டு உர நிறுவனங்களினால் விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்படும் 50 கிலோ யூரியா உர மூடை ஒன்றின் விலை 9,000 ரூபாவாக குறைக்கப்படவுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர நேற்று (31) தெரிவித்துள்ளார். 02 பக்கம்

# ஜனாதிபதி ரணில் விசேட உரை

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று இரவு 08 மணிக்கு நாட்டு மக்களுக்கு விசேட உரை நிகழ்த்தவுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது. ஜனாதிபதியின் ஜப்பான் விஜயம் மற்றும் சர்வதேச நாணய நிதிய அதிகாரிகளுடனான சந்திப்பின் பின்னணியில் அவரது உரை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### சமயங்களுக்கு எதிரான கருத்துகள்

# சுயாதீன விசாரணையை கோரும் கத்தோலிக்க சபை



குறுகிய நோக்கங்களுக்காக நாட்டில் மீண்டும் சமய மற்றும் இனவாதத்தை தூண்ட முயற்சிக்க வேண்டாம். நதாஷா எதிரிசூரியவுக்கும் கத்தோலிக்கச் சபைக்கும் எவ்விதத்தொடர்பும் இல்லை. அவர் கத்தோலிக்க பாடசாலையின் முன்னாள் மாணவியும் இல்லை. நாட்டில் வழங்கப்பட்டுள்ள கருத்துரிமையை முறையாக பயன்படுத்திக் கொள்ளவேண்டும். சமய நம்பிக்கைகளுக்கும் சமய முன்னோடிகளுக்கும் அவதூறு ஏற்படுத்துவதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. அவர்களுக்கு எதிராக சுயாதீன விசாரணை அவசியம். எந்தவொரு சமயமாக இருந்தாலும் அதற்கு அவதூறு ஏற்படுத்துவதை கத்தோலிக்க சபை முழுமையாக கண்டிப்பதாக அருட்தந்தை சிறில் காமினி பெர்னாண்டோ தெரிவித்தார். 02 பக்கம்

# வெலிக்கடை பொலிஸில் மனிதப் படுகொலை



## ராஜகுமாரியின் மரணத்துக்கு நீதி கிடைக்கும் வரை போராடப்போவதாக வடிவேல் சுரேஷ் சூளுரை

•கே. சுபானி

வெலிக்கடை பொலிஸாரால் மனிதப் படுகொலையொன்று அரங்கேற்றப்பட்டுள்ளது. ராஜகுமாரியின் மரணம் தொடர்பில் இதுவரை நியாயம் கிடைக்கப்பெறவில்லை. இதனை நாம் கைவிடப்போவதில்லை. 02 பக்கம்

# பிரதேச செயலர் சடலமாக மீட்பு

நீர்கொழும்பு பிரதேச செயலாளர் ஆயிஷ் பெரேராவின் (வயது 42) சடலம் தூக்கில் தொங்கிய நிலையில் நேற்று அவரது உத்தியோகபூர்வ இல்லத்திலிருந்து(31) மீட்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலாளரை கடமைக்கு அழைத்து வருவதற்காக அவர் வசித்த இல்லத்துக்கு உத்தியோகபூர்வ வாகனத்தில் சாரதி சென்றுள்ளார். இதன்போது பிரதேச செயலாளரைக் காணாததால் சாரதி உள்ளே நுழைந்த போது அவர் கயிற்றில் தொங்கிய நிலையில் காணப்பட்டதையடுத்து பொலிஸாருக்கு அறிவித்துள்ளார்.

இதற்கமைய, சடலம் பிரேத பரிசோதனைக்காக நீர்கொழும்பு பொது வைத்தியசாலையின் பிரேத அறையில் நேற்று வைக்கப்பட்டது. இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நீர்கொழும்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# குண்டசாலை நீர் விநியோகத்தில் தும்பறை சிறைச்சாலைக் கழிவுகள்

## நடவடிக்கை எடுக்குமாறு ஆளுநர் அறிவுறுத்து



•ஜே.எம். ஹபீஸ்

கண்டி, குண்டசாலை நீர் விநியோகத்திட்டத்தில் அசுத்த நீர் கலப்பதாக தெரிவிக்கப்பட்ட முறைப்பாடுகளை அடுத்து அதனை நேரில் கண்டறிய மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ. கமகே அதிகாரிகள் சகிதம் நேற்றுமுன்தினம் அங்கு விஜயம் மேற்கொண்டார்.

அதன்போது தும்பறை சிறைச்சாலையின் கழிவு நீர் கலக்கப்படுவதையும் ஆளுநரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. 02 பக்கம்

# ஜும்ஆத் தொழுகையை 12.45க்குள் நிறைவுசெய்க

## அம்பாறை உலமா சபை வேண்டுகோள்

جمعية علماء سريلانكا - فرع منطقة امبارى
සමස්ත ලංකා ජම්ඉයියතුල් උලමා - අම්පාර දිස්ත්‍රික්ක ශාඛාව
அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா - அம்பாரை மாவட்டக் கிளை
ALL CEYLON JAMIYYATHUL ULAMA - AMPARA DISTRICT BRANCH

•பீ.எம்.எம்.ஏ. காதர், அஸ்லம் எஸ்.மௌலானா

நாட்டில் தற்போது நடைபெற்று வருகின்ற கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சை எழுதும் மாணவர்களின் நலன்களை கருத்திற் கொண்டு நாளை வெள்ளிக்கிழமை குத்பா மற்றும் ஜும்ஆத் தொழுகையை பிற்பகல் 12.45 மணியுடன் நிறைவு செய்யுமாறு அம்பாறை... 02 பக்கம்

### கமெண்ட் கந்தர்...



மதச் சண்டைகளை கூட சகிச்சுக் கொள்ளலாம் பாருங்கோ... ஆனா மதச் சண்டைகளை நிறுத்தோணுமெண்டு ஞானசார தேரர் சொல்லுறதத் தான்..!

# தந்தையை கொலைசெய்தவரை பழிதீர்க்க காத்திருந்த சிறுவன்

## ஏழு ஆண்டுகளின் பின்னர் கொலைக் குற்றவாளியாக பொலிஸில் சரண்

தனது 12 வயதில் தந்தையை கொலை செய்தவரை பழிதீர்ப்பதற்காக ஏழு வருடங்களாக காத்திருந்த சிறுவன் ஒருவன் ஏழு வருடங்களின் பின்னர் கொலைசெய்துவிட்டு பொலிஸ் நிலையத்தில் சரணடைந்த சம்பவமொன்று அம்பாந்தோட்டை பகுதியில் இடம்பெற்றுள்ளது.

அம்பாந்தோட்டை, சூச்சி கிராமத்தில் கடந்த 21 ஆம் திகதி இரவு 9.50 மணியளவில் 35 வயதான ஒரு பிள்ளையின் தந்தையொருவர் துப்பாக்கிப் பிரயோகத்துக்கு இலக்காகி உயிரிழந்தார். இவர் இரண்டு கொலைகள் உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுகளுடன் தொடர்புடையவரென பொலிஸார் தெரிவித்தனர். 02 பக்கம்

# இன, மத அடிப்படையில் அரசியல் கட்சிகள்

## தடைசெய்ய வலியுறுத்துகிறார் மைத்ரி

•நா.தினுஷா

பௌத்ததர்மத்தை விமர்சித்து அதற்கு அவதூறு ஏற்படுத்துபவர்களுக்கு அடுத்த பிறவியில் தகுந்த தண்டனை கிடைக்கும்.

ஏனைய சமயங்களின் உரிமைகளை பாதுகாக்கும் அதே சந்தர்ப்பத்தில் இது சிங்கள பௌத்தர்களின் நாடு என்பதை உறுதிப்படுத்த மகா சங்கத்தினர் முன்வரவேண்டும்.

அத்துடன் இன, மத அடிப்படையிலான அரசியல் கட்சிகளை தடைசெய்வதற்கு தகுந்த ஏற்பாடுகள் அரசியலமைப்பில் உள்வாங்கப்பட வேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்ரிபால சிறிசேன தெரிவித்தார். 02 பக்கம்

### உஷ்



முன்னாள் பிரதமர் மஹிந்த, பெசில், கோட்டா ஆகிய மூன்று பேரும் சில தினங்களுக்கு முன்னர் மஹிந்தவின் இல்லத்தில் நீண்ட நேரம் சந்தித்து முக்கிய கலந்துரையாடல் ஒன்றை நடாத்தியுள்ளனராம்.

அரசியல் நிலைமைகள் மற்றும் அடுத்தகட்டமாக என்ன செய்வது என்பன தொடர்பில் இதன்போது விரிவாக பேசப்பட்டதாக தகவல்.

எவ்வாறாயினும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு புதிய பதவிகள் எதனையும் இப்போதைக்கு கோருவதில்லையென இந்த சந்திப்பில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாம்.

# யாழ். தையிட்டி விகாரைக்கு எதிராக மீண்டும் போராட்டம்



**யாழ். செய்தியாளர்**

யாழ்ப்பாணம், தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு எதிர்ப்புத் தெரிவித்து மூன்றாம் கட்டப் போராட்டம் நேற்று (31) ஆரம்பமாகியுள்ளது.

இந்த விகாரையை அகற்றுமாறு கோரி ஏற்கனவே இரண்டு கட்டங்களாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினராலும் பொதுமக்களாலும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இந்நிலையில், அதே பகுதியில் மீண்டும் போராட்டம் ஆரம்பமாகியுள்ளது.

இந்தப் போராட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், கட்சியின் பொதுச்செயலாளர் செல்வராசா கஜேந்திரன், மகளிர் அணித் தலைவி வாசுகி சுதாகரன், கட்சியின் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டுள்ளனர்.








**மட்டக்களப்பில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசனின் 19 ஆவது ஆண்டு நினைவஞ்சலி யாழ். ஊடக அமையத்தில் நேற்று (31) இடம்பெற்றது.**

**(படப்பிடிப்பு: யாழ். செய்தியாளர்)**

## மின்சார சபையின்...

உலக வங்கி மற்றும் மின்சார சபை ஆகிவற்றுக் கிடையே நேற்று முன்தினம் (31) இடம்பெற்றது.

இது தொடர்பில் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளதாவது:- சர்வதேச நாணய நிதியத்தின் பரிந்துரைகளுக்கமைய உலக வங்கியின் நிபுணர்கள், மின்சார சபை மற்றும் சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்து கலந்தாலோசித்து தற்போதுள்ள திட்டங்களுக்கான கடன்களை, செலுத்த வேண்டிய தொகைகளை மறுசீரமைப்புச் செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

மின்சார சபையின் மீளமைப்பைப் பெறக்கூடிய அபிவிருத்திகள், சுயாதீன மின் விநியோகஸ்தர்கள், ஏனைய விநியோகஸ்தர்கள், அரச வங்கிகளிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட செயற்பாட்டு மூலதனக் கடன்கள், பிற கடன்கள், 2023 ஆம் ஆண்டுக்கான இழப்புகளை மீட்டல் மற்றும் மின்சார சபையின் வணிகத்திட்டங்கள் என்பன பொது இணக்கப்பாட்டுக்கமைய மறுசீரமைப்பு செய்யப்படும் என்றார்.

இந்த மறுசீரமைப்பு நடவடிக்கைகள் இறுதிசெய்யப்பட்ட பின்னர் அமைச்சரவை அங்கீகாரத்துக்கு சமர்ப்பிக்க எதிர்பார்த்துள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

## தொற்றா நோய்களின் பரவல்...

போக்குவரத்து சமிக்ஞை விளக்குகள் போல உணவு வகைகளைப் பிரித்துக்கொள்ள வேண்டும். பச்சை சிறந்த தெரிவாகவும் மஞ்சள் அவதானத் தெரிவாகவும் சிவப்பு கட்டுப்பாட்டுத் தெரிவாகவும் கொள்ள வேண்டும். பச்சைவகை உணவுகள் ஊட்டச்சத்துகளின் ஆதாரங்கள். மஞ்சள் உணவு, பானங்களைத் தெரிவுசெய்யும்போது அவதானம் தேவை. அத்துடன் சிவப்பு நிற உணவு, பானங்கள் அவசியமற்றவை. அவற்றைக் கட்டுப்பாட்டுடன் பெற்றுக்கொள்ள வேண்டும்.

நாட்டில் பல பாகங்களிலும் தொற்றா நோய்கள் பரவுகின்றமையால் சர்க்கரை, கொழுப்பு, உப்பு உணவுகளில் மிகுந்த அவதானம் தேவை. சிறுவர்கள், இளைஞர்கள் கட்டுப்பாட்டுடன் உணவு வகைகளை உண்ணவேண்டியது அவசியம் எனத் தெரிவித்துள்ளார்.

## யூரியா விலை குறைப்பு...

இந்த விலைக் குறைப்பு ஜூன் 15 முதல் அமுலுக்கு வருகிறது.

யூரியா உரத்தின் விலையைக் குறைப்பது தொடர்பில் நேற்று புதன்கிழமை (31) இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

மேலும், 31,500 மெற்றிக் தொன் யூரியா உரம் கொண்ட உரக் கப்பல் ஒன்று ஜூன் மாத ஆரம்பப் பகுதியில் இலங்கைக்கு வரவுள்ளது.

டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி அதிகரிப்பு மற்றும் உலக சந்தையில் யூரியா உரத்தின் விலை குறைவடைந்துள்ளமை போன்றவற்றின் அனுகூலத்தை விவசாயிகளுக்கு வழங்கும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

## தடுப்பூசிக்கு தட்டுப்பாடு...

வைரஸ் தொற்று இருப்பதாக சந்தே கிக்கப்படும் பன்றிகளை உடனடியாக கால்நடை மருத்துவரிடம் காண்பிக்குமாறும் பண்ணை உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த வைரஸ் நோய்க்கு தடுப்பூசி தேவையான போதிலும் குறித்த தடுப்பூசிகள் தற்போது நாட்டில் இல்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் தடுப்பூசிகளை இறக்குமதி செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக மேல் மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் கே.கே. சரத் சுட்டிக்காட்டியுள்ளார்.

## ஜும்ஆத் தொழுகையை...

மாவட்ட ஜம்மியத்துல் உலமா சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஜம்மியத்துல் உலமா சார்பில் அதன் தலைவர் அஷ்ஷெய்க் ஐ.எல்.எம். ஹாஷிம், செயலாளர் அஷ்ஷெய்க் ஏ.எல்.நாசிர்கனி ஆகியோர் இணைந்து வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்த மாணவர்கள் ஜும்ஆத் தொழுகைக்குப் பின்னர் உரிய நேரத்திற்கு பரீட்சை மண்டபத்தைச் சென்றடைவதற்கு ஏதுவாக வெள்ளிக்கிழமை குத்பா பிரசங்கத்தைச் சுருக்கி, ஜும்ஆத் தொழுகையை பிற்பகல் 12.45 மணிக்கு முன்னதாக நிறைவு செய்யுமாறு ஜும்ஆப் பள்ளிவாசல்களின் நிர்வாகிகள் மற்றும் குத்பா பிரசங்கம் நிகழ்த்தும் உலமாக்களை அம்பாறை மாவட்ட ஜம்மியத்துல் உலமா கேட்டுக்கொண்டுள்ளது.

## தந்தையை கொலைசெய்தவரை...

தனது மனைவி மற்றும் நான்கு வயது பிள்ளையுடன் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்தபோது குடும்பஸ்தர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. இந்தக் கொலையுடன் தொடர்புடைய நபர் தலைமறைவாகியிருந்தார்.

இந்நிலையில், 19 வயதான இளைஞரொருவர் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் ஹம்பாந்தோட்டை பொலிஸ் நிலையத்தில் கடந்த 29 ஆம் திகதி சரணடைந்துள்ளார். சூச்சி கிராமத்தில் குடும்பஸ்தரை தானே கொன்றதாக அவர் பொலிஸாரிடம் வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

நீண்ட நேர வாக்குமூலத்தில் பொலிஸாரிடம் அவர் அதிர்ச்சியான தகவலொன்றை வெளியிட்டுள்ளார். தானும் தனது தந்தையும் கடந்த 2016 ஆம் ஆண்டு மாட்டுக் கொட்டகைக்குச் சென்றுகொண்டிருந்தபோது நபரொருவர் தந்தை மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தி கொலைசெய்ததாகவும் அப்போது தனக்கு 12 வயதெனவும் கூறியுள்ளார்.

அந்தச் சம்பவத்துக்கு பழிதீர்க்கும் வகையிலேயே 07 வருடங்கள் காத்திருந்து கொலையாளி மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாகத் தெரிவித்துள்ளார்.

வாக்கு மூலத்தைப் பதிவுசெய்த பொலிஸார் சந்தேக நபரான 19 வயது இளைஞரை ஹம்பாந்தோட்டை நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தியதுடன் எதிர்வரும் ஜூன் 07 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மேலதிக நீதவான் ஓஷத மீகார மஹஆராச்சி உத்தரவிட்டுள்ளார்.

## குண்டசாலை நீர்...

இதனையடுத்து இன்னும் இரண்டு மாத காலத்திற்குள் கழிவு நீர் தொடர்பாக சிறைச்சாலை நிர்வாகம் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் உத்தரவிட்டார். அரச மற்றும் தனியார் துறையினர் எப்போதும் உள்ளூராட்சி சபைகளின் சட்டதிட்டங்களுக்கு இணங்கி நடக்கவேண்டும் என்பதையும் ஆளுநர் வற்புறுத்தினார்.

## வெலிக்கடை பொலிஸில்...

நீதிகிடைக்கும்வரை போராடுவோம் - இவ்வாறு பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தெரித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

வெலிக்கடை பொலிஸாரால் தாக்கப்பட்டு பதுளை, பல்லகெட்டுவ - நாவில தோட்டத்தைச் சேர்ந்த ராஜகுமாரி என்ற மூன்று பிள்ளைகளின் தாயொருவர் இன்று உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த ராஜகுமாரியின் சடலத்தை கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கும்போது மயக்கமடைந்து வீழ்ந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அவர் மயக்கமடைந்து விழவில்லை. அவர் நடிகையொருவரின் வீட்டிலேயே பணிபுரிந்து வந்துள்ளார். பொலிஸ் உயரதிகாரிகளின் கோரிக்கைக்கு அமையவே அவர் ஆண் பொலிஸாரால் தாக்கப்பட்டு உயிரிழந்துள்ளார். பொலிஸாரால் ராஜகுமாரியின் கணவருக்கும் 10ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது. குறித்த நடிகை 25ஆயிரம் ரூபா வழங்கியுள்ளார். இதுகுறித்த விசாரணைகள் நீதிமன்றத்தால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மலையக மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதி என்றவகையில் எனது மாவட்டத்துக்குள் இவ்வாறான சம்பவமொன்று இடம்பெற்றுவதை அனுமதிக்கமுடியாது. இதுதொடர்பில் கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என பொலிஸ்மா அதிபரிடம் கேட்டுக்கொள்கிறேன்.

பொலிஸ் மா அதிபரிடம் நான் ஒன்றைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். குறித்த பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உட்பட சில பொலிஸ்அதிகாரிகளை இடமாற்றம் செய்து மேலும் சில அதிகாரிகளை இடமாற்றம் செய்வதால் உயிரிழந்த 41வயதான குறித்த பெண்ணுக்கு உயிர் வந்துவிடுமா? தாயை இழந்த அந்த மூன்று பிள்ளைகளின் தாய்தான் கிடைத்துவிடுவாரா?

வாழ்வாதாரமில்லாததன் காரணமாக வேலைவாய்ப்புத் தேடி மலையகத்திலிருந்து தலைநகருக்கு வந்த பெண்ணை, அடித்தாவது உண்மையைப் பெறவேண்மென பொலிஸ் உயரதிகாரியொருவரே வெலிக்கடைப் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இந்நிலையில், பொலிஸ்மா அதிபரிடம் கோரிக்கையொன்றை முன்வைக்கிறோம்.

இது முதல் சம்பவமல்ல. வேலைவாய்ப்புத் தேடி தலைநகருக்கு வந்த பல மலையகப் பெண்கள், யுவதிகளுக்கு இவ்வாறான நிலை ஏற்பட்டுள்ளது. இதனை இன்னும் பார்த்துக்கொண்டிருக்க முடியாது. பாராளுமன்றத்திலும் இதுகுறித்து நாம் பேசியிருந்தோம். சபாநாயகர் மற்றும் பாராளுமன்றத்தின் அவதானத்துக்கும் கொண்டுவந்துள்ளோம். பொலிஸாருக்கும் இதுகுறித்து அறிவித்துள்ளோம். இதனை நாம் கைவிடப்போவதில்லை.

ராஜகுமாரியென்ற மூன்று குழந்தைகளின் தாயின் மரணத்துக்கு காரணம் யார்? எந்தப் பொலிஸ் உயரதிகாரியின் உத்தரவின் பேரில் அவர் தாக்கப்பட்டுள்ளார்? ஒரு பெண்ணை எவ்வாறு ஆண் பொலிஸார் தாக்கமுடியும்? ஆண் பொலிஸார் ஒரு பெண்ணிடம் விசாரணை நடத்த முடியாது. நீதிக்குட்பட்டு பெண் பொலிஸாரே ஒரு பெண்ணை விசாரணைக்குட்படுத்த முடியும். எவ்வாறு பெண்ணொருவரை அடித்துக் கொல்லமுடியும்?

வெலிக்கடை பொலிஸ் மனிதப் படுகொலையொன்று அரங்கேற்றப்பட்டுள்ளது.

இதுகுறித்த முழுமையான அறிக்கையை பெற்றுத்தருமாறு பொலிஸ்மா அதிபரிடமும் பாராளுமன்றத்திடமும் வேண்டுகோள் விடுக்கின்றோம் - என்றார்.

பிரபல கலைஞர் சுதர்மா ஜயவர்தன வீட்டில் பணிபுரிந்த நிலையில், குற்றச்சாட்டு ஒன்றின்பேரில் வெலிக்கடைப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட பின்னர் உயிரிழந்த பதுளையைச் சேர்ந்த 41வயதுடைய ராஜகுமாரி என்ற மூன்று பிள்ளைகளின் தாயொருவர் அண்மையில் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

## சமயங்களுக்கு எதிரான...

கொழும்பில் நேற்று (31) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சமய நம்பிக்கைகள் மற்றும் சமய முன்னோடிகளுக்கு அவதூறு ஏற்படுத்துவதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. சகல சமயங்களையும் மதித்து செயற்படுவது நகரிக சமூகத்தில் வாழும் சகலரதும் கடமையும் பொறுப்புமாகும். எந்தவொரு சமயமாக இருந்தாலும் அதற்கு அவதூறு ஏற்படுத்துவதை முழுமையாகக் கண்டிக்கிறோம். சமயவாத மற்றும் இனவாதப் பிரச்சினைகளை உருவாக்கி நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தி அதனூடாக அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்ள முயற்சிக்கும் ஒருசில அரசியல்வாதிகள், அவ்வாறான வாய்ப்புகளை ஏற்படுத்துவதற்காக ஒருசில நபர்கள், வெகுஜன ஊடகங்கள் மற்றும் சமூக வலைத்தளங்களைத் திட்டமிட்டுப் பயன்படுத்தும் செயற்பாடுகள் நீண்டகாலமாக இடம்பெற்று வந்துள்ளன.

நாட்டில் தற்போது இடம்பெற்றுவரும் சமய பேதமும் அவ்வாறான சூழ்ச்சியாகவே நாங்கள் கருதுகிறோம். இவ்வாறான செயற்பாடுகளினால் அரசியல்வாதிகள் சொகுசு வாழ்க்கையை அனுபவிப்பார்கள் என்பதுடன் மக்களே நெருக்கடியைச் சந்திப்பார்கள். அதனால், பௌத்தம் உள்ளிட்ட ஏனைய சமயங்களுக்கும் அவதூறு ஏற்படுத்தியதாகச் சந்தேகிக்கப்படும் நபர்கள், அவர்களின் பின்னணியில் இருப்பவர்கள் மற்றும் அமைப்புகள் தொடர்பில் பரந்துபட்ட ஒழுக்க ரீதியான- நீதியான சுயாதீன விசாரணைகளை முன்னெடுத்து உண்மையை வெளிப்படுத்துவது பொலிஸாரினதும் குற்றவியல் விசாரணைப் பிரிவினரதும் பொறுப்பாகும்.

இதுபோன்று மதவாத கருத்துகளுக்கு ஆதரவளித்து சமூக ஊடகங்களில் கருத்து பகிரும் கருத்துகள் சமூகத்தில் பிரச்சினையை உருவாக்கலாம். அறிந்தோ - அறியாமலோ அவர்கள் மக்கள் மத்தியில் முரண்பாட்டை உருவாக்கவே முயற்சிக்கிறார்கள். எவ்வித தேடலுமின்றி அநீதியான கருத்துகளை முன்வைப்பதனூடாக கருத்துரிமைக்கிருக்கும் சுதந்திரத்தை அவர்கள் தவறாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

கத்தோலிக்க தனியார் பாடசாலை பொது முகாமையாளர் அருட்தந்தை கெமுனு டயஸ் அறிக்கையொன்றை வெளியிட்டு "பௌத்தத்துக்கு அநீதி இழைக்கும் வகையில் கருத்து வெளியிட்டதாகக் குறிப்பிட்டு கைதுசெய்யப்பட்டுள்ள நதாஷா எதிரிசூரிய என்பவர் கத்தோலிக்க பாடசாலையொன்றின் பழைய மாணவர் என்றும் அவரினால் முன்னெடுக்கப்பட்ட இந்த நிகழ்ச்சி கத்தோலிக்க பாடசாலையொன்றின் கேட்போர் கூடத்தில் முன்னெடுக்கப்பட்டிருந்ததாகவும் தெரிவித்து சமூக வலைத்தளங்களால் வெளியிடப்படும் பதிவுகளை ஏற்றுக்கொள்ள முடியாது.

குற்றஞ்சாட்டப்பட்டுள்ள நதாஷா எதிரிசூரிய எந்தவொரு கத்தோலிக்க பாடசாலையினதும் பழைய மாணவர் இல்லை. அதேபோன்று, அவரின் நிகழ்ச்சியும் எந்தவொரு கத்தோலிக்க தனியார் பாடசாலை கேட்போர் கூடத்திலும் இடம்பெறவில்லை. எங்களால், உறுதிப்படுத்தப்பட்டுள்ள காரணங்களுக்கமைய குறித்த நிகழ்வு கொழும்பு – 03, பிஷப் கல்லூரியின் கேட்போர் கூடத்திலேயே ஏற்பாடு செய்துள்ளார். ஆகவே, அது கத்தோலிக்க சபைக்குச் சொந்தமான கத்தோலிக்க பாடசாலை இல்லை" என்று குறிப்பிட்டுள்ளார். ஆகவே, இவ்வாறான கருத்துகளை வெளியிடும் நபர்கள் தொடர்பில் சிந்தித்து செயற்படுமாறு மக்களிடம் கோருகிறோம்.

சரியான, உண்மையான தகவல்களை அறிந்துகொள்வதற்கு மக்களுக்கு இருக்கும் அடிப்படைச் சுதந்திரத்தின் அடிப்படையிலேயே ஊடக சுதந்திரம் பேணப்படுகின்றது. தகவலொன்றை வெளியிடுவதற்கு முன்னர் அதன் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டியது ஊடகவியலாளர்களின் பொறுப்பாகும்.

பௌத்த சமயம், புத்தர் மற்றும் பௌத்த கலாசாரத்துக்கு அவதூறு ஏற்படுத்தும் வகையில் முன்வைக்கப்பட்ட கருத்துகளை முழுமையாகக் கண்டிக்கிறோம். அதேபோன்று ஏனைய சமயங்களுக்கு எதிராக முன்வைக்கப்படும் அவதூறுகளையும் நாங்கள் வன்மையாகக் கண்டிப்பதுடன் சம்பந்தப்பட்ட தரப்பினர் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்குமாறும் அரசாங்கத்திடம் கோருகிறோம்.

## இன, மத அடிப்படையில்...

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று (31) இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

பௌத்த சமயத்தை விமர்சிக்கும் தகைமை யாருக்கும் இல்லை. புத்தரை போன்ற சமய முன்னோடி இவ்வுலகில் இல்லை. ஒவ்வொருவரும் ஒவ்வொரு விடயங்களைக் கூற முடியும். அவ்வாறான கருத்துகளை நாங்கள் மறுக்கிறோம். அத்துடன், இது தொடர்பில் வேலைத்திட்டமொன்றை முன்னெடுத்து அரசாங்கம் உள்ளிட்ட ஏனைய பிரிவினர்களின் உதவியுடன் இது சிங்கள பௌத்த நாடு என்ற உரிமையைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டியது மகாசங்கத்தினரின் பொறுப்பாகும்.

அதற்காக ஏனைய சமயத்தாரின் உரிமையை பறிக்கவேண்டும் என்று கூறவில்லை. கத்தோலிக்கர்களோ, முஸ்லிம்களோ, இந்துக்களோ அல்லது மொழி எதுவாக இருந்தாலும் சமயம் எதுவாக இருந்தாலும் சகலருக்கும் சமூகத்தில் சமமான உரிமை வழங்கப்பட வேண்டும். ஜனநாயக சமூகத்தில் உயிர்வாழ்வதற்கான உரிமை இருக்கவேண்டும். சமய அடிப்படையில் யாராவது பௌத்த தர்மத்துக்கு அவதூறு ஏற்படுத்துவார்களாக இருந்தால், விமர்சிப்பார்களாக இருந்தால் அவர்களை பாவம் செய்தவர்களாகவே நான் கருதுகிறேன். பௌத்த தர்மத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது போன்று தற்போது செய்யும் பாவங்களுக்கான தண்டனையை அடுத்த பிறவியில் அனுபவிப்பார்கள்.

அரசியல் நோக்கங்களுக்காக இன, மொழி அடிப்படையிலான கட்சிகள் பல தசாப்தங்களாக உருவாக்கப்பட்டு வந்துள்ளன. அரசியல் கட்சிகளின் பெயர்களைக் குறிப்பிட்டுக்கூற விரும்பவில்லை. இருந்தபோதும், சமய அடிப்படையில் அல்லது மொழி அடிப்படையில் அரசியல் கட்சிகள் பதிவுசெய்யப்படக்கூடாது என்ற விடயத்தை எமது அரசியலமைப்பில் உருவாக்க வேண்டும். தேசிய ஆணைக்குழுவும் இதனை உறுதிப்படுத்த வேண்டும்.

சமய அடிப்படையில் பார்த்தால், பௌத்த தர்மத்துக்கு எதிராக செயற்படுபவர்களுக்கு எங்கிருந்தோ நிதியுதவி கிடைக்கிறது. எங்கிருந்து கிடைக்கிறது என்பதை உறுதியாகக் கூற முடியாது. உள்நாட்டிலிருந்தோ அல்லது வெளிநாட்டிலிருந்தோ அடிப்படைவாத அமைப்புகளினால் அந்த நிதி கிடைக்கப்பெறலாம். அதனால், அந்த அவர்களுக்கு கிடைக்கும் நிதிகளை நிறுத்தி அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார்.

## டெங்கு அபாய நிலைமை!...

மேலும், நடப்பாண்டில் மே மாதத்தில் மாத்திரம் அண்ணளவாக 9,300 வரையலான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது இது சடுதியான அதிகரிப்பாகக் கருதப்படுவதுடன் இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் 25 டெங்கு மரணங்கள் சம்பவித்துள்ளதாக சுகாதாரப் பிரிவுத் தகவல்கள் மேலும் சுட்டிக்காட்டியுள்ளன.

இதுதொடர்பில் தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவின் வைத்தியர் லஹிரு கொடித்துவக்கு தொடர்ந்து குறிப்பிடுகையில்,

நாடு பூராகவுமுள்ள சுகாதார வைத்திய அதிகாரிகள் 60 பிரிவுகள் எச்சரிக்கை வலயங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. அந்த வலயங்கள் இன்னும் எச்சரிக்கை நிலையிலிருந்து விடுவிக்கப்படவில்லை. இந்த 60 வலயங்களிலும் நாளாந்தம் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நாடுபூராகவுமுள்ள 73 வைத்தியசாலைகளில் நள்ளிரவு வரையில் பதிவாகும் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையை கணக்கெடுப்புச் செய்வதற்கான நடவடிக்கையொன்றை தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு முன்னெடுத்து வருகின்றது. மருத்துவமனைகளின் நோயாளர்களின் கொள்ளளவு வீதம் அதிகரிப்பதற்கான அபாயம் இருக்கிறதா என்பதை அறிந்துகொள்வதற்காகவே இந்தக் கணக்கெடுப்புகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நாளொன்றில் 868 வரையிலான நோயாளர்கள் பதிவாகிறார்கள். கெழும்பு தேசிய மருத்துவமனை, ஐ.டி.எச். மருத்துவமனை, நீர்கொழும்பு பொது மருத்துவமனை, கொழும்பு தெற்கு போதனா மருத்துமனை, கொழும்பு வடக்கு போதனா மருத்துவமனை ஆகிய வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்படும் நோயாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

டெங்கு ஒழிப்பு பிரிவு மற்றும் சுகாதார அமைச்சு ஆகியன இணைந்து டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்காக விஷேட வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. இது பல்வேறு வைரஸ் நோய்கள் பரவலடையும் காலகட்டமாகும். இரண்டு நாட்களுக்கு மேற்பட்ட காய்ச்சல் இருக்குமாக இருந்தால் மருத்துவ ஆலோசனையைப் பெற்றுக்கொள்ள வேண்டும். மேலும், சுற்றுச்சூழலில் இருக்கும் பரவலடையக்கூடிய இடங்களை சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டியது மக்களின் கடமையாகும் என்று வலியுறுத்தினார்.

நாட்டின் இதுவரையான காலப்பகுதியில் 38,998 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளார்கள். ஜனவரி மாதத்தில் 8,963 பேரும், பெப்ரவரி மாதத்தில் 6,709 பேரும், மார்ச் மாதத்தில் 6,419 பேரும், ஏப்ரல் மாதத்தில் 7,617 பேரும் அடையாளங்காணப்பட்டுள்ளதுடன் இந்த மே மாதத்தில் மாத்திரம் நேற்று (31) காலை வரையில் 9,290 நோயாளர் அடையாளங் காணப்பட்டுள்ளனர்.

கம்பஹா மாவட்டத்தில் 8,622 பேரும், கொழும்பு மாவட்டத்தில் 8,211 பேரும், களுத்துறை மாவட்டத்தில் 2,433 பேரும், திருகோணமலை மாவட்டத்தில் 1,557 பேரும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 1,617 பேரும், புத்தளம் மாவட்டத்தில் 2,555 பேரும் டெங்கு நோயாளர்களாக அடையாளங் காணப்பட்டுள்ளனர். மொத்த நோயாளர்களின் எண்ணிக்கையில் 49.6 சதவீதமான நோயாளர்கள் மேல்மாகாணத்திலேயே அடையாளம் காணப்பட்டுள்ளார்கள்.

இந்தத் தரவுகளின் அடிப்படையில், 2022 ஆம் ஆண்டில் பிரதானமான ஒன்பது மாவட்டங்களில் 76, 689 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் தகவல்கள் மேலும் சுட்டிக்காட்டுகின்றன.

# ஆபாச செயற்பாடுகளுக்கு சிறுமியொருவர் ஊக்குவிப்பு

## சந்தேகத்தின்பேரில் ஆசிரியர் கைது

(அநுராதபுரம் செய்தியாளர் )

அநுராதபுரம் தம்புத்தேகம நகரிலுள்ள பிரபல பாடசாலையொன்றில் கல்வி பயிலும் 14 வயது சிறுமியொருவரை ஆபாச செயற்பாடுகளுக்கு ஊக்குவிப்பதற்காக முயற்சித்த சம்பவம் தொடர்பில் ஆசிரியர் ஒருவரை தம்புத்தேகம பொலிஸார் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் சிறுமியின் பெற்றோர் தம்புத்தேகம பொலிஸ் நிலைய சிறுவர் மற்றும் மகளிர் பிரிவில் செய்த முறைப்பாட்டையடுத்து சம்பவத்துடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் ஆசிரியரை பொலிஸார் நேற்றுமுன்தினம் (30) கைதுசெய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர் சிறுமி கல்வி பயிலும் அதே பாடசாலையில் கடமையாற்றும் 44 வயதுடைய தம்புத்தேகம, மல்தெனிபுர பகுதியை வசிப்பிடமாகக்கொண்ட ஆசிரியர் என்பது ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# முச்சக்கரவண்டிகளுக்கு மீற்றர் பொருத்தப்பட வேண்டும்

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் முச்சக்கர வண்டிகளுக்கு மீற்றர் பொருத்தப்பட வேண்டும் எனவும் அவ்வாறு கட்டண மீற்றர் பொருத்தாத முச்சக்கரவண்டிகளுக்கு முச்சக்கரவண்டி தரிப்பிடங்களில் நின்று சேவையில் ஈடுபடுவதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது எனவும் யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதன்போதே மேற்குறித்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மீற்றர் பொருத்துவதற்கான கட்டணத்தை மீற்றர் பொருத்தும் நிறுவனத்துடன் கலந்தாலோசித்து முச்சக்கரவண்டி உரிமையாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்காத வகையில் அதனைப் பொருத்துவதற்குரிய ஏற்பாடுகளை செய்யுமாறும் இதன்போது பிரஸ்தாபிக்கப்பட்டது.

## தினசரி பலாபலன்கள்

சோபகிருது வருடம் வைகாசி மாதம் 18ஆம் நாள்
வியாழக்கிழமை

**மேஷம்:** காதல், திருமணம் கைகூடி வரும். பங்கு வியாபாரத்தில் வெற்றியுடன் அதிக லாபம் கிடைக்கும்.

**ரிஷபம்:** நினைத்த காரியத்தில் வெற்றி, நோய், கடன் நிவர்த்தி, எதிரிகளை வெற்றிகொள்வீர்கள்.

**மிதுனம்:** உங்களது மனக்குறையை மற்றவர்கள் தீர்த்துவைப்பார்கள். உடல் நலம் கவனம் வேண்டும்.

**கடகம்:** குடும்பத்துடன் சந்தோஷமாக இருப்பீர்கள். உணர்வுகளை கட்டுப்படுத்திக்கொள்ளவும்.

**சிம்மம்:** உங்களுக்கென எதையாவது இன்று வாங்குவீர்கள். மனத்துணிவுடன் காரியங்களை சாதிப்பீர்கள்.

**கன்னி:** குதர்க்கமான பேச்சுகள் வேண்டாம். பணம், பொருள் கைமாறும்போது கவனமாக செயல்படவும்.

**துலாம்:** நண்பர்கள் சந்திப்பால் நல்ல பலன் கிடைக்கும். உடல் நலம் சிறப்பாக அமையும். தெளிந்த சிந்தனையுடன் சேவையாற்றுவீர்கள்.

**விருச்சிகம்:** செலவுகளைக் கட்டுப்படுத்திக் கொள்ளவும். எதிர்பாராத உடல் நலக் குறைபாடுகளால் செலவுகள் ஏற்படலாம்.

**தனுசு:** தொழில், வியாபாரத்தில் மேன்மை உண்டு. கைவிட்டுப்போனவை திரும்பக் கிடைக்கும். புகழ், செல்வாக்குடன் விளங்குவீர்கள்.

**மகரம்:** புதிய முயற்சிகளில் வெற்றியும் இலாபங்களும் அமையும். யாரையும் நம்பி எதையும் ஒப்படைத்துச் செல்லாதீர்கள்.

**கும்பம்:** திட்டமிட்ட பிரயாணத்தால் நன்மையும் இலாபங்களும் உண்டு. எதற்கும் அவசரம் வேண்டாம். பொறுமையோடு இருங்கள்.

**மீனம்:** தொழில், வியாபாரத்தில் அதிக எரிச்சல் கோபமடைவீர்கள். எதற்கும் பொறுமையை இழந்து விடாதீர்கள்.

**திதி:** துவாதசி பி.ப.1.39 வரை பின் திரயோதசி
**நட்சத்திரம்:** சித்திரை மு.ப.6.48 வரை பின் சுவாதி
**யோகம்:** மரண யோகம் பி.ப.6.48 வரை பின் அமிர்த சித்தம்.
**வார சூலை:** தெற்கு திசை நோக்கி சுபகாரியம் கூடாது
**நல்லநேரம் :** மு.ப.10.50 - 11.50 மணி வரை
**ராகுகாலம் :**1.20 - 2.50 மணி வரை
**எமகண்டம் :**5.50- 7.20 மணி வரை
**குளிகை :**8.50- 10.20 மணி வரை
**சந்திராஷ்டமம்:** மீன ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும்
**தனஅதிஷ்டம்:** மிருகசீரிடம், சித்திரை, அவிட்டம் (பிறந்தவர்களுக்கு)
**விஷேட தினம்:** பிரதோஷ விரதம்

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739

# ஜனாதிபதியின் ஜப்பான் விஜயம் நாட்டை மீளக் கட்டியெழுப்புவதற்கான உந்துசக்தி

## பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சம்பத்

ஜப்பான் விஜயத்தின்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெளிவிவகார மற்றும் பொருளாதாரக் கொள்கைகளை உலகுக்கு தெளிவாக எடுத்துரைத்திருப்பது, பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான இலங்கையின் முயற்சிகளுக்குப் பெரும் உந்துசக்தியாக அமைந்துள்ளது - என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடகப் பிரிவால் தயாரிக்கப்படும் 101 கதா நிகழ்ச்சியில் கலந்துகொண்டு ஜப்பானில் இடம்பெற்ற ஆசியாவின் எதிர்காலம் தொடர்பான 28ஆவது நிக்கெய் சர்வதேச மாநாட்டில் ஜனாதிபதி ஆற்றிய உரை குறித்து கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

ஒரு முதிர்ந்த அரசியல்வாதி மற்றும் இராஜதந்திரி என்றவகையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உலகிலுள்ள அனைத்து குழுக்களையும் சமமான முறையில் கையாள்கிறார். தொலைநோக்குப் பார்வையுடன் பணியாற்றுகிறார். எனவே, கடந்த காலங்களில் எடுக்கப்பட்ட தொலைநோக்கற்ற தீர்மானங்களை சீர்செய்ய ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளார். இலகுரக ரயில் திட்டம் கைவிடப்பட்டமையே ஜப்பானுடன் விரிசல் ஏற்படக் காரணமாக அமைந்தது.

ஒரு நாடு துரிதமாக வளர்ச்சியடைய வேண்டுமானால், நகர்ப்புற நெரிசலான பகுதிகளிலுள்ள நெரிசலை நீக்க வேண்டும். இல்லையெனில், ஒரு நாட்டை அபிவிருத்திசெய்வது கடினமாகும். ஜப்பானின் இலகுரக ரயில் திட்டத்தை முன்னெடுத்திருந்தால், அது நம் நாட்டுக்கு சிறந்த ஒன்றாக அமைந்திருக்கும். ஆனால், கடந்த காலத்தில் எடுத்த முட்டாள்தனமான முடிவால் அந்த வாய்ப்பை இழந்தோம். ஆனால், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இது தொடர்பில் வருத்தம் தெரிவித்துள்ளார். இதனால் இலங்கை மீது ஜப்பான் வைத்திருந்த தவறான புரிதலை மாற்றிக்கொள்ள முடிந்துள்ளது.

சர்வதேச நாணய நிதியம் சுமார் மூன்று பில்லியன் அமெரிக்க டொலர்களை கடன் மறுசீரமைப்புக்காக வழங்கியது. இந்த இலகுரக ரயில் திட்டத்தில் ஜப்பான் சுமார் இரண்டு பில்லியன் டொலர்களை முதலீடுசெய்ய எதிர்பார்த்திருந்தது. இந்த முதலீடு கடனாக இருந்தாலும், அதை மானியமாகவும் எண்ணலாம். பொதுவாக, ஜப்பானியர்களின் உதவிகள் ஒரு நாட்டுக்குக் கிடைத்தால், அந்த நாட்டின் மீது முழு உலகத்தின் கவனமும் திரும்பும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஜப்பான் விஜயம் காரணமாக நம் நாட்டுக்கு இரண்டு பில்லியன் டொலர்கள் முதலீட்டு உதவிகள் கிடைக்கவுள்ளன. இதனை நமது நாட்டின் பொருளாதார மறுமலர்ச்சிக்கான நல்ல வாய்ப்பாகக் குறிப்பிடலாம்.

எதிர்காலத்தில் இரு தரப்பினரின் இணக்கப்பாடின்றி வெளிநாட்டுத் திட்டங்களை நிறுத்த முடியாத வகையில் சட்டமூலமொன்றை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்போவதாக ஜனாதிபதி கருத்து வெளியிட்டுள்ளார். முதலீடுகளின் பலனை நாடு அடையவேண்டுமானால், அத்தகைய கருத்து சட்டமாக்கப்படுவது மிகவும் முக்கியமானது. முதலீடுகளுக்கு அழைப்பு விடுக்கும் நாடு என்றவகையில் ஏனைய நாடுகளிலிருந்து முதலீடுகள் வரும்போது இவ்வாறான சட்டம் மிகவும் முக்கியமானது. நகர் போக்குவரத்து



நெரிசலுக்குத் தீர்வாக, இலகுரக ரயில் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. தற்போதைய சூழ்நிலையில், இலகுரக ரயில் பாதை அமைப்பது மிகவும் முக்கியமானது. ஜப்பானில் இடம்பெற்ற ஆசியாவின் எதிர்காலம் தொடர்பான 28ஆவது நிக்கெய் சர்வதேச மாநாட்டில் எமது பிரதேச நண்பர்களுடன் கருத்துகளை பரிமாறிக்கொள்ளும் வாய்ப்பு கிடைத்தது. இது எமது நாட்டுக்குக் கிடைத்த நல்ல சந்தர்ப்பமாகும். அந்த மாநாட்டில் ஜனாதிபதி வரவேற்கத்தக்க உரையொன்றை நிகழ்த்தினார்.

ஜப்பான் உயர் மாநாட்டில் உரையாற்றிய ஜனாதிபதி, ஆசியா உலகின் எதிர்காலம் என்பதை விளக்குகிறார். நாட்டின் தலைவர் ஒருவர் தனது வெளியுறவுக் கொள்கையை சரியான முறையில் உலகுக்கு முன்வைக்கிறார்.

எதிர்காலத்தில், ஜப்பானுடன் நெருக்கமாகப் பணியாற்றும் வாய்ப்பு கிடைக்கும். எம்மாலும் ஜப்பான் போன்ற நாடாக மாறலாம் என்றும் தெரிவித்தார்.

# எதிர்க்கட்சித் தலைவரை சந்தித்த FUTA பிரதிநிதிகள்





பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனப் பிரதிநிதிகள் நேற்றுமுன்தினம் (30) காலை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவை சந்தித்தனர்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்திலேயே குறித்த சந்திப்பு இடம்பெற்றது.

உயர்கல்வித்துறையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் குறித்து இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டதோடு, தொழில் வல்லுநர்கள் நாட்டைவிட்டு வெளியேறும் விவகாரம் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

பல்கலைக்கழக கட்டமைப்பில் நிலவும் வெற்றிடங்கள் குறித்து பிரதிநிதிகள் குழுவினர் எதிர்க்கட்சித் தலைவரிடம் தெரிவித்ததோடு, அரசாங்கம் விதித்துள்ள தாங்க முடியாத வருமான வரி குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

# புகைத்தலுக்கு எதிரான பிரசாரம் தென்மராட்சியில்







(சாவகச்சேரி நிருபர்)

உலக புகைத்தல் எதிர்ப்புத் தினத்தை முன்னிட்டு நேற்று (31) புதன்கிழமை தென்மராட்சி பிரதேச செயலகத்தினரால் புகைத்தலுக்கு எதிரான பிரசார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

தென்மராட்சி பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் தமிழினி மேற்படி பிரசார மற்றும் விழிப்புணர்வு நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

அதன்பின்னர் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் சாவகச்சேரி பொதுச்சந்தை, பஸ் தரிப்பிடம் மற்றும் வர்த்தக நிலையங்களில் துண்டுப்பிரசுரங்களை வழங்கி புகைத்தலுக்கு எதிரான பிரசாரங்களை முன்னெடுத்தமை குறிப்பிடத்தக்கது.

# முச்சக்கரவண்டி சாரதிக்கு பழச்சாறு வழங்கி நகை, பணம் கொள்ளை

## மீரிகமவில் திடுக்கிடும் சம்பவம்





பழச்சாறு பானம் வழங்கி முச்சக்கரவண்டி சாரதியை மயக்கமடையச்செய்து நகை, பணம் என்பனவற்றை இளம் சோடி கொள்ளையிட்ட சம்பவமொன்று மீரிகமவில் பதிவாகியுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக பாதிக்கப்பட்ட முச்சக்கரவண்டி சாரதி தெரிவிக்கையில், ''இளம் சோடியொன்று உறவினர் ஒருவரின் வீட்டுக்குச் செல்லவேண்டும் எனக்கூறி மீரிகம, கல்எலிய பகுதியில் முச்சக்கர வண்டியில் ஏறினர். பயணத்தை ஆரம்பித்து சிறிது தூரத்தில் மேலும் ஒருவரையும் முச்சக்கர வண்டியில் அவர்கள் ஏற்றிக்கொண்டனர். பின்னர் வண்டியை கடை ஒன்றின் முன் நிறுத்துமாறு கூறி கடைக்குச் சென்று கேக்கும் 2 பழச்சாறு பானங்களையும் வாங்கி வந்தனர். இதில் ஒரு பானத்தை எனக்குக் கொடுத்தனர். சிறிது தூரம் பயணித்ததும் வாகனத்தை நிறுத்த சொன்னார்கள். ஆனால், அதன் பின்னர் என்ன நடந்தது என்பது எனக்குத் தெரியாது. மறுநாள் அதிகாலையில்தான் நான் விழித்துக்கொண்டேன். அதற்கு பிறகு நீண்ட தூரம் தவழ்ந்து போனேன். ஒரு வீட்டை அடைந்தேன். அவர்கள் எனக்கு உதவினார்கள். எனது வீட்டாருக்கு தகவல் கொடுத்தார்கள் என்றார்.

நிச்சயதார்த்த மோதிரம், தங்கச் சங்கிலி, பென்டன் ஆகிய தங்க நகைகளையும் பணம் மற்றும் கடிகாரம் என்பனவற்றையும் குறித்த குழுவினர் கொள்ளையிட்டுச் சென்றுள்ளதாக சாரதி மேலும் தெரிவித்தார்.

சாரதி முச்சக்கரவண்டியுடன் சனநடமாட்டமற்ற பகுதியில் கைவிடப்பட்ட நிலையில் மீட்கப்பட்டிருந்தார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் கௌரவிப்பு









இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளராகவும் கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் விரிவுரையாளராகவும் சேவையாற்றி அரச பணியிலிருந்து ஓய்வுபெறும் சரா. புவனேஸ்வரனைக் கௌரவிக்கும் நிகழ்வு கலாசாலை அதிபர் ச.லலீசன் தலைமையில் நேற்று (31) கலாசாலை ரதிலட்சுமி மண்டபத்தில் இடம்பெற்றது. இதன்போது கலாசாலை விரிவுரையாளர் க. அன்பரசி, இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் சி.கணேசலிங்கம் ஆகியோர் வாழ்த்துரைகளை வழங்கினர். நிகழ்வில் கலாசாலை சமூகத்தின் சார்பில் மணிவிழா நினைவுச்சின்னம் வழங்கப்பட்டது.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2023, ஜூன் 01ஆம் திகதி, வியாழக்கிழமை

# யாழ்ப்பாண நூலக எரிப்பு கலாசார படுகொலையின் சுவடு

தெற்காசியாவின் அறிவுக் களஞ்சியமாக போற்றப்பட்ட யாழ். பொது நூலகம் எரிக்கப்பட்டு இன்றுடன் 42 ஆண்டுகள் கடந்தாலும் தமிழ் மக்கள் மத்தியில் அத்துயர சம்பவம் ஏற்படுத்திய வடு இந்தக் கணம்வரை மாறாதுள்ளது.

ஜே.ஆர்.ஜெயவர்தனவின் ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் திட்டமிட்டு நடத்தப்பட்ட இச்சம்பவமானது தமிழ் மக்களின் அடையாளம், அறிவு மற்றும் பண்பாடு போன்றவற்றை இல்லாதொழிக்கும் தமிழ் இன அழிப்பின் ஓர் அடையாளமாகவே தமிழ் மக்கள் இன்றும் நோக்குகின்றனர்.

இந்நூலக அழிப்பின்போது பல நூற்றாண்டு பழமைவாய்ந்த தமிழ், ஆங்கில நூல்களும் ஓலைச்சுவடிகளும் அழிந்துபோயின. இவற்றில் கிடைப்பதற்கு அரிதான ஐசாக் தம்பையா நன்கொடை கொடுத்த இலக்கியம், சமயம், மொழியியல் தத்துவம் தொடர்பாக சுமார் 6,000 நூல்களும், இந்திய வர்த்தகர் ஒருவரால் கொடுக்கப்பட்ட 'மகாத்மா காந்தியின் சத்தியசோதனை', 1672ஆம் ஆண்டில் பிலிப்ஸ் போல்டியார் என்பவர் எழுதிய 'டச்சு ஆட்சியில் இலங்கை' என்னும் நூல், 1660ஆம் ஆண்டில் கண்டி மன்னரால் சிறைபிடிக்கப்பட்டவேளை றொபேட் நொக்ஸ் என்பவர் எழுதிய 'இலங்கையராவார்' என்னும் நூல் ஆகியவை அழிந்தன.

1585ஆம் ஆண்டில் கத்தோலிக்க மதத்தலைவர்களால் தமிழில் எழுதப்பட்ட நூல், சேர். பொன்னம்பலம் இராமநாதன் எழுதிய பகவத்கீதை விளக்கம், சித்தாந்தம், செந்தமிழ் இலக்கிய நூல்கள், திருமதி இராமநாதன் அம்மையார் எழுதிய இராமாயண மொழிபெயர்ப்பு, மகாகவி பாரதியாரின் நண்பரான நெல்லையப்பன் எழுதிய நூல்கள், கடலைக்குடி நடேச சாஸ்திரியார் எழுதிய சோதிட சாஸ்திர நூல்கள், வானசாஸ்திரம் சம்பந்தமான நூல்கள், சித்தவைத்திய வாசகங்கள் அடங்கலான ஏட்டுச்சுவடிகள் ஆகியவை அழிந்தன.

மேலும், முத்துத்தம்பிப்பிள்ளை எழுதிய 'அபிதானகோசம்', சிங்காரவேலு முதலியார் எழுதிய 'அபிதான சிந்தாமணி', முதலியார் இராசநாயகம் எழுதிய 'புராதன யாழ்ப்பாணம்', சுவாமி ஞானப்பிரகாசம், முத்துத்தம்பிப்பிள்ளை எழுதிய யாழ்ப்பாணம் பற்றிய நூல்கள், கல்லடி வேலன் என்று அழைக்கப்பெற்ற கே.வேலுப்பிள்ளை இயற்றிய 'யாழ்ப்பாண வைபவகௌமுகி', சிற்பக்கலை பற்றிய நூல்கள், தனிநாயக அடிகளார் பதிப்பித்து வெளியிடப்பட்ட 'தமிழ் கலாசாரம்' எனும் ஆங்கில சஞ்சிகை, இராசையனார், வன்னியசிங்கம், கதிரவேற்பிள்ளை, ஆனந்தகுமாரசாமி மற்றும் முதலியார் குலசபாநாதன் சேகரித்த நூல்கள் மற்றும் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கையெழுத்துபட பிரதிகளும் அழிவடைந்தன. இந்நூலகத்தை இலங்கையில் மட்டுமல்ல, இந்தியாவின் தமிழ்நாடு உட்பட பல பாகங்களிலிருந்தும் தேடிவந்து பயன்படுத்தியிருந்தனர்.

யாழ். பொது நூலகம் அழிக்கப்பட்டு 37 ஆண்டுகள் கடந்தாலும்கூட அந்த அழிப்பு நடவடிக்கை மூலம் தமிழ் மக்களின் இதயங்களில் ஏற்படுத்திய வடு இன்னமும் மாறாதது. தென்னாசியாவின் மிகப் பெரிய அறிவியல் பொக்கிஷமாக போற்றப்பட்ட யாழ்ப்பாண பொது நூலகத்தின் அழிப்பு என்பது மனித நாகரிகத்தின் மோசமான துயரம். 1981ஆம் ஆண்டு மே 31ஆம் திகதி நள்ளிரவில் இந்தக் கொடுமை நேர்ந்தபோது அதனை சென். பற்றிக்ஸ் கல்லூரியின் மாடியிலிருந்து நேரில் பார்த்த தாவீது அடிகளார் அந்தக் கணத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தி ஒன்றே அந்த நூலகத்தின் பெறுமதியை எடுத்துக் காட்டுகின்றது.

இவ்வாறான சம்பவங்கள் இலங்கையில் மட்டும் முதல் தடவையாக நடக்கவில்லை. 1930ஆம் ஆண்டு ஜேர்மனி பேர்லின் வீதியில் நூற்றுக்கனக்கான புத்தகங்கள் எரிக்கப்பட்டு வீதிகளில் எல்லாம் சாம்பல் பரவியதாகக் கூறப்படுவதுண்டு. நாசிகளின் இனப்படுகொலைக்கு அவ்வழிப்பு பெரும் எடுத்துக்காட்டு. அதேபோல் யாழ். நூலக எரிப்பும் தமிழ் இனப்படுகொலை என்றே கருதவேண்டும்.

வரலாற்றிலிருந்து நாங்கள் பாடம் படிக்கத் தவறுகின்றபோது மீண்டும் மீண்டும் அந்தத் தவறான வரலாறு மீட்டப்படும் என்பதற்கு இந்தத் தேசத்தின் வரலாறு சான்றாக இருக்கின்றது. இந்த நூலக எரிப்பு மூலம் தென்னாசியாவிலிருந்து தேடி வைத்த பொக்கிஷங்கள்- குறிப்பாக, ஓலைச் சுவடிகள் 1800ஆம் ஆண்டுக்கான பத்திரிகை பதிவுகள் அனைத்தும் இல்லாமலாக்கப்பட்டன.

யாழ். பொது நூலகம் 1933ஆம் ஆண்டு முதன்முதலில் மு.செல்லப்பா என்ற தனிநபரால் ஆஸ்பத்திரி வீதியில் ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் படிப்படியாக வளர்ச்சியடைந்து தற்போதுள்ள கட்டடத்தில் 1959ஆம் ஆண்டு அப்போதைய யாழ். மாநகர முதல்வர் அல்பிரட் துரையாப்பாவால் திறந்துவைக்கப்பட்டது. 1981ஆம் ஆண்டு நூலகம் எரிக்கப்பட்டபோது 97 ஆயிரம் புத்தகங்களும், பழமைவாய்ந்த ஓலைச்சுவடிகளும், தனிநபர்களின் சேமிப்புப் புத்தகங்களும் முற்றுமுழுதாக அழிவடைந்தன.

பின்னர் 2004ஆம் ஆண்டு மீண்டும் புனரமைக்கப்பட்டு நூலகம் திறந்துவைக்கப்பட்டது. தற்போது ஒரு இலட்சத்து 8 ஆயிரம் புத்தகங்களும், தனிநபர்களால் அன்பளிப்புச் செய்யப்பட்ட ஓலைச்சுவடிகளும் உள்ளன.

இந்திய அரசாங்கத்தால் கடந்த வருடம் 16 ஆயிரம் புத்தகங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன.

யாழ்ப்பாண நூலக எரிப்பானது கலாசார படுகொலையின் சுவடாகவே பார்க்கமுடியும். ''அன்பும் அறனும் அருளும்'' என்று பாடிய பெருந்தகைகள் வாழ்ந்த மண்ணிலே இருந்த இந்த நூலகத்தை எரித்து தமிழ் இனத்தை மண்ணோடு மண்ணாக்கலாம் என்ற கனவு கண்டவர்கள் இன்று அதில் தோற்றுப் போய்விட்டார்கள்.

தமிழர்கள் இன்றும் நிமிர்ந்தே நிற்கின்றனர்.

யாழ். நூலக எரிப்பு நாளை நினைவுகூருவதென்பது, மனித நாகரிகத்திலேயே மோசமான அரசியல் செயற்பாட்டிலிருந்து விடுபடும் புதிய பண்பாட்டை இந்தத் தேசத்தின் அரசியலும் மக்களும் விழிப்புக்கொள்ளும் நாளாகக் கொண்டாட வேண்டும் என்பதே.

சீப்பை ஒளித்துவிட்டால் திருமணத்தை நிறுத்திவிடலாம் என்ற நகையாடல் எமது பேச்சு வழக்கில் இருப்பதுபோல், நூலகத்தை எரித்துவிட்டால் தமிழரின் ஞானத்தை ஒழித்துவிடலாம் என்று கனக்குப் போட்டனர் சிங்கள இனவாதிகள். ஆனால், பீனிக்ஸ் பறவைபோல் சாம்பலில் இருந்து எழுந்து பறந்துகொண்டிருக்கின்றனர் தமிழர்கள்.

சிங்கள இனவாதிகளுக்கு மன்னிப்பையே வழங்கமுடியாத நிகழ்வொன்றை குறிப்பிடலாம் என்றால் அது யாழ். நூலக எரிப்புச் சம்பவமாகவே இருக்கும். தமிழரின் வரலாற்றுத் துயரில் அழிக்க முடியாத கறையே இது.



## யாழ். நூலகம் எரிக்கப்பட்டு 42 ஆண்டுகள் நிறைவு:

# அழிக்கப்பட்ட தமிழர்களின் வரலாற்றுப் பொக்கிஷம்!

**அருண் பிரசாத்**

தமிழ் இனத்தின் பண்பாட்டு அடையாளங்களில் ஒன்றாகத் திகழ்ந்த இலங்கையின் யாழ்ப்பாணத்தில் அமைந்திருந்த 'பொதுசன நூலகம்', சிங்களப் பேரினவாதிகளால் திட்டமிட்டு எரிக்கப்பட்டு இன்றோடு 42 ஆண்டுகளாகின்றன.

இலங்கையின் முதலாவது மாவட்ட சபைத் தேர்தல்கள் 1981ஆம் ஆண்டு ஜூன் 4 அன்று நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தது. தேர்தல் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக இலங்கையின் பல இடங்களிலிருந்தும் காவல்துறையினர் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பிவைக்கப்பட்ட னர்.

1981 மே 31 அன்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேர்தல் பிரசாரக் கூட்டம் யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடியில் நடந்துகொண்டிருந்தபோது, அடையாளம் தெரியாத நபர்கள் துப்பாக்கிச்சூடு நடத்தியதைத் தொடர்ந்து அங்கு வன்முறை வெடித்தது. அன்றிரவு யாழ்ப்பாணத்தின் பிரபல வணிக நிறுவனங்கள், கடைகள் என அனைத்தும் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன.

அன்று கொளுத்தப்பட்ட வன்முறைத் தீ மறுநாளும் கொழுந்துவிட்டு எரிந்தது. ஜூன் முதலாம் திகதி இரவு யாழ்ப்பாணத்திலிருந்த 'ஈழநாடு' தினசரி அலுவலகமும், அதற்கு அருகிலிருந்த கடைகள் பலவும் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன. அன்று முழுவதும் நிலவிய பதற்றச் சூழலை இந்தச் சம்பவம் மேலும் தீவிரப்படுத்தியது. அதைத் தொடர்ந்துதான் அந்த வரலாற்றுக் கொடுமை அரங்கேறியது. ஆம், சிங்களப் பேரினவாதக் கும்பலொன்று யாழ்ப்பாண பொதுசன நூலகத்தைத் திட்டமிட்டு கொளுத்தியது. தமிழ்ப் பண்பாட்டின் ஒரு பகுதி திரும்பப் பெற முடியாத வகையில் எரிந்து சாம்பலாகிப் போனது.

இருபதாம் நூற்றாண்டின் இன, பண்பாட்டு அழிப்புகளில் ஒரு மிகப்பெரும் வன்முறையாகக் கருதப்படும் யாழ்ப்பாண நூலக எரிப்பு நடந்து இன்றோடு 40 ஆண்டுகளாகின்றன.

**தொடக்கம்**

1930களில் யாழ்ப்பாணத்தின் முக்கிய பிரமுகர்களில் ஒருவராகத் திகழ்ந்த கே.எம்.செல்லப்பாவின் மனதில் உதித்த எண்ணம்தான் யாழ்ப்பாண பொது நூலகத்துக்கான அடிப்படை. தன்னுடைய சொந்த சேகரிப்பிலிருந்த நூல்களையும், பத்திரிகைகளையும் கொண்டு, 1933இல் வாடகை நூலகமொன்றை தன்னுடைய வீட்டிலிருந்தே தொடங்கிய செல்லப்பா, அதை அடுத்தகட்டத்துக்குக் கொண்டுசெல்ல விரும்பினார்.

அதைத் தொட ர்ந்து நகரின் மற்ற முக்கிய பிரமுகர்களின் ஆலோசனையின்பேரில், 1934 ஓகஸ்ட் 1 அன்று யாழ்ப்பாண பொது வைத்தியசாலையில் வாடகை அறையொன்றில் 844 நூல்கள் மற்றும் 36 பருவ வெளியீடுகளுடன் யாழ்ப்பாண பொதுசன நூலகம் தொடங்கப்பட்டது. ஒரு கட்டத்தில் இங்கு இடநெருக்கடி ஏற்படவே, 1936இல் நகரக் கட்டடம் அமைந்துள்ள டவுன் ஹோலுக்கு அருகே நூலகம் மாற்றப்பட்டது.

தொடங்கப்பட்ட தினத்திலிருந்தே நூலகம் மிக வேகமாக வளரத் தொடங்கியது. பாதிரியார்கள் லோங், டேவிட் உள்ளிட்ட யாழ்ப்பாணச் சமூகத்தின் முக்கிய பிரமுகர்கள், கல்வியாளர்கள் எனப் பல தரப்பினரும் நூலகத்துக்கான நிரந்தமான நவீனக் கட்டடம் ஒன்றை உருவாக்க முயன்றனர். கட்டடக் கலைஞர் வி.எம்.நரசிம்மன் கட்டிடத்தை வடிவமைத்துக் கொடுக்க, யாழ். நூலகம் சர்வதேச தரத்தை எட்டுவதற்கான ஆலோசனைகளை இந்திய நூலகர் எஸ்.ஆர்.ரங்கநாதன் வழங்கினார்.

1953இல் நூலகத்தின் புதிய கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டப்பட்டு, திராவிடக் கட்டடக் கலையில் அமைந்த புதிய நூலகக் கட்டடம் 1959 ஒக்டோபர் 11 அன்று திறக்கப்பட்டு செயற்பாட்டுக்கு வந்தது. அப்போது யாழ்ப்பாணத்தின் மேயராக இருந்த அல்பிரட் துரையப்பா நூலகத்தைத் திறந்துவைத்தார்.

நூலகத்தில் குழந்தைகளுக்கான பகுதி 1967இல் தொடங்கப்பட்டது. உரைகள், கருத்தரங்கங்கள், பண்பாட்டு நிகழ்வுகள் ஆகியவற்றை ஒருங்கிணைப்பதற்காக நிகழ்வரங்கம் ஒன்று 1971இல் திறக்கப்பட்டது. உலகம் முழுவதும் தனிநபர்கள், அயல் தூதரகங்கள், தொண்டு நிறுவனங்கள் மூலம் புத்தகங்கள் ஆயிரக்கணக்கில் குவியத் தொடங்கின. நூலகக் குழுவும் அரிய நூல்களைச் சேகரிக்கத் தொடங்கியது.

உலகில் வேறெங்கும் இல்லாத நூற்றாண்டு பழமைவாய்ந்த ஓலைச்சுவடிகள், நூல்கள், வரலாற்று ஆவணங்கள், 1800களில் யாழ்ப்பாணத்தில் வெளியான பல பத்திரிகைகளின் மூலப் பிரதிகள் என மிகப் பெரிய எண்ணிக்கையிலான பொக்கிஷங்களை யாழ்ப்பாண நூலகம் தன்னகத்தே கொண்டிருந்தது. யாழ்ப்பாணத்தின் பல இடங்களிலும் தனிப்பட்டவர்களிடமும் இருந்துவந்த பல நூல்கள், குறிப்பாக, நூற்றாண்டுகள் பழமையான ஓலைச்சுவடிகள் போன்றவை இங்கு பத்திரப்படுத்தப்பட்டிருந்தன.

1585இல் கத்தோலிக்க மதத் தலைவர்களால் தமிழில் எழுதப்பட்ட நூல்கள், கண்டி சிறையிலிருந்தபோது ரொபார்ட் க்னாஸ் எழுதிய 'History of Ceylon நூலின் பிரதி, முதலியார் ராசநாயகத்தின் 'பண்டைய யாழ்ப்பாணம்', தமிழின் முதல் இலக்கியக் கலைக்களஞ்சியமான முத்துத்தம்பிப்பிள்ளையின் 'அபிதான கோசம்', சிங்காரவேலு முதலியார் தொகுத்த 'அபிதான சிந்தாமணி' ஆகியவற்றின் பிரதிகள், சித்த வைத்திய ஓலைச்சுவடிகள் போன்ற எண்ணிடலங்காதவை இந்நூலகத்தின் சேகரிப்புகளாக விளங்கின.

சுமார் 97,000 அரிய நூல்களுடன் தென்கிழக்காசியாவிலேயே மிகப்பெரிய நூலகங்களில் ஒன்றாகத் திகழ்ந்த யாழ்ப்பாண பொது நூலகம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அறிவுச் சமூகத்தால் வெகுவாகப் பயன்படுத்தப்பட்டுப் போற்றப்பட்டது. அதைவிட முக்கியமாக தமிழ்ச் சமூகத்தின் பண்பாட்டு வெளியாக யாழ். நூலகம் விளங்கியது.

இத்தகைய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த, ஓர் இனத்தின் பண்பாட்டு அடையாளமாகத் திகழ்ந்த நூலகத்தைத்தான் சிங்களப் பேரினவாதிகள் திட்டமிட்டு அழித்தனர். யாழ்ப்பாணம் நூலக எரிப்பு என்பது ஒரு தனி சம்பவமல்ல; அது இலங்கைத் தமிழர் பிரச்சினையில், தமிழர்களை உளவியல் ரீதியாக அடுத்தகட்டத்துக்கு நகர்த்திய ஒரு வரலாற்று நிகழ்வு.



## நக்கல் நமசிவாயம்

பாக்கு நீரிணைய நீந்திக் கடந்திருக்கிறான் மட்டக்களப்பு சின்னப்பெடியன்.. தமிழ்ப் பெடியன் எண்டதால தான் அரசாங்கமோ அரசியல்வாதிகளோ இதக் கண்டுகொள்ளேல்ல போல..!



## இன்றைய நாளில்...

- 1855 – அமெரிக்க நாடுகாண் பயணி வில்லியம் வோக்கர் நிக்கராகுவாவைக் கைப்பற்றினார்.
- 1946 – இலங்கையில் இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் முதல் தடவையாக இரத்மலானை விமான நிலையம் பொதுமக்களின் பயன்பாட்டிற்குத் திறக்கப்பட்டது.
- 1947 – சுதந்திரன் இதழ் கொழும்பிலிருந்து வெளியாக ஆரம்பித்தது.
- 1958 – இலங்கை இனக்கலவரம், 1958 கலவரங்களில் பாதிக்கப்பட்ட 4,397 தமிழ் அகதிகள் கப்பல் மூலம் காங்கேசன்துறைக்குக் கொண்டுசெல்லப்பட்டனர்.
- 1964 – கென்யா குடியரசானது.
- 1971 – தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது.
- 1981 – தெற்காசியாவில் சிறந்த நூலகமாக விளங்கிய யாழ். பொது நூலகம் சிங்களக் காவல்துறையினரால் எரிக்கப்பட்டதில் பல்லாயிரக்கணக்கான பெறுமதிமிக்க நூல்கள் அழிந்தன.
- 2001 – நேபாள அரச படுகொலைகள்: நேபாளத்தின் முடிக்குரிய இளவரசர் திபெந்திரா தனது தந்தை மன்னர் பிரேந்திரா, தாயார் ஐசுவர்யா உட்பட குடும்பத்தினர் ஏழு பேரை சுட்டுக் கொன்றார்.
- 2011 – 25 பறப்புகளை மேற்கொண்ட எண்டெவர் விண்ணோடம் தனது கடைசிப் பறப்பை முடித்து பூமியில் தரையிறங்கியது.

# பணியாளர் பிரச்சினைகளைத் தீர்க்க பொருத்தமான பொறிமுறையை வழங்குக

## சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்துக்கு கோபா குழு பணிப்பு





இலங்கை சமுர்த்தி அதிகாரசபையை திணைக்களமாக மாற்றும் போது இருந்த பணியாளர்களின் எண்ணிக்கை, அவர்களை உள்ளீர்ப்பு செய்த முறை, இதுவரை உள்ளீர்ப்பு செய்யப்படாத பணியாளர்களின் எண்ணிக்கை மற்றும் அது தாமதமடைவதற்கான காரணம், பதவி உயர்வுகள் என்பவற்றைப் பகுப்பாய்வு செய்து விரைவாகத் தீர்ப்பதற்கான பொறிமுறையைத் தயாரித்து வழங்குமாறு சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்துக்கு கோபா குழு பணிப்புரை விடுத்துள்ளது.

ஏப்ரல் 25 ஆம் திகதி அரசாங்கக் கணக்குகள் பற்றிய (கோபா) குழுக் கூட்டத்தில் வழங்கப்பட்ட பரிந்துரைகளை செயற்படுத்துவதன் முன்னேற்றம் குறித்து மீளாய்வு செய்வதற்கு சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் அண்மையில் (26) இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தலைமையில் இடம்பெற்ற கோபா குழுவுக்கு அழைக்கப்பட்டிருந்தது. இதன்போதே மேற்கண்டவாறு பணிப்புரை விடுக்கப்பட்டது.

இலங்கை சமுர்த்தி அதிகாரசபையை திணைக்களமாக மாற்றும் போது இருந்த பணியாளர்களின் எண்ணிக்கை, அவர்களை உள்ளீர்ப்பு செய்த முறை, இதுவரை உள்ளீர்ப்பு செய்யப்படாத பணியாளர்களின் எண்ணிக்கை மற்றும் அது தாமதமடைவதற்கான காரணம், பதவி உயர்வுகள் என்பவற்றைப் பகுப்பாய்வு செய்து விரைவாகத் தீர்ப்பதற்கான பொறிமுறையைத் தயாரிக்குமாறு வழங்கப்பட்ட பரிந்துரை குறித்து இதன்போது விரிவாக ஆராயப்பட்டது.

அதற்கமைய, 2023 ஏப்ரல் 30 வரை 22,646 மொத்தப் பணியாளர்களில், 17,512 பேர் உள்ளீர்க்கப்பட்டுள்ளதாகவும் மீதமுள்ளவர்களை உள்ளீர்ப்பது தாமதமடைவதால் 3,027 அதிகாரிகளுக்கு முறையான நியமனக் கடிதங்கள் வழங்கப்படாதிருப்பது சிக்கலாக உள்ளது என்றும் 2015 இல் அமைச்சரவைத் தீர்மானத்துக்கமைய இந்த அதிகாரிகளின் நியமனம் மற்றும் ஒழுங்குமுறைப் பொறுப்பாளர் சமுர்த்திப் பணிப்பாளர் நாயகமாகக் கருதியமையால் இந்த அனுமதிகளை பொதுச்சேவை ஆணைக்குழுவா அல்லது முகாமைத்துவ சேவைகள் திணைக்களமா மேற்கொள்ளவேண்டும் என்பது தொடர்பில் சிக்கல் நிலை ஏற்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

அதற்கமைய, இந்த அதிகாரிகளின் நியமனம் மற்றும் பதவியுயர்வுகள், முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் பரிந்துரையுடன் பொதுச் சேவை ஆணைக்குழுவின் அனுமதிக்காக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை இதன்போது புலப்பட்டது.

இந்தப் பிரச்சினையைத் தீர்த்து மொத்தப் பணியாளர்களில் சிக்கல்கள் காணப்படும் பணியாளர்கள் தொடர்பில் தெளிவான வகைப்படுத்தலை மேற்கொண்டு தீர்வுக்கான பொறிமுறையொன்றை ஜூலை 6 ஆம் திகதிக்குள் வழங்குமாறு குழுவின் தலைவர் பணிப்புரை வழங்கினார்.

அத்துடன், பல்வேறு அரசாங்கங்களின் கீழ் பல்வேறு அரசியல் விடயங்கள் காரணமாக இந்தத் திணைக்களத்தின் நிர்வாகத்தில் சில தெளிவின்மை உருவாகியுள்ளதால் விரைவாக இந்தப் பிரச்சினையைத் தீர்த்து வினைத்திறனான சேவையை வழங்குவதன் அவசியத்தை குழு வலியுறுத்தியது.

சமுர்த்தி வங்கிக் கட்டமைப்பை கணினிமயப்படுத்தும் வேலைத்திட்டம் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது. இந்த வேலைத்திட்டம் தற்பொழுது 5 மாவட்டங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் இந்த வருடத்தில் டிசம்பர் மாதமளவில் அதனை நிறைவுசெய்ய முடியுமெனவும் சமுர்த்திப் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார். அதேபோன்று, எதிர்காலத்தில் செயற்படுத்தப்படவுள்ள அஷ்வசும நலன்புரி நன்மைகள் கொடுப்பனவை சமுர்த்தி வங்கிக் கட்டமைப்பினூடாக செயற்படுத்தப்பட வேண்டியதன் முக்கியத்துவம் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

தமன பிரதேச செயலகத்தில் சமுர்த்திப் பயனாளிகளுக்கு வாழ்வாதாரத்துக்காக மீன்பிடி வலைகளை வழங்குவதில் பாரிய நிதி முறைகேடு இடம்பெற்றமை தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளுமாறு வழங்கப்பட்டுள்ள பரிந்துரை தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது. முறையான கொள்முதல் நடவடிக்கையின்றி பிரதேச செயலகத்துடன் இணைந்து நடத்தப்பட்ட இவ்விடயம் தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர். இதனுடன் சம்பந்தப்பட்ட சமுர்த்தி அதிகாரிகள் மற்றும் பிரதேச செயலாளர் உள்ளிட்ட ஏனைய அதிகாரிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதால் பொது நிர்வாக அமைச்சு மட்டத்தில் விசாரணை நடத்துமாறு பொது நிர்வாக அமைச்சின் செயலாளருக்கு கடிதம் மூலம் அறிவிக்கவுள்ளதாக கோபா குழுவின் தலைவர் தெரிவித்தார்.

சமுர்த்தி வங்கிகள் கணக்காய்வாளர் நாயகத்தின் கணக்காய்வுக்கு கொண்டுவரப்படாமை தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. இது தொடர்பில் சட்டமா அதிபரிடமும் கேட்கப்பட்டுள்ளதாகவும் இது பற்றி இரண்டு கருத்துகள் நிலவுவதாகவும் இதன்போது தெரியவந்தது. சமுர்த்தி வங்கிகள் சமுர்த்தி திணைக்களத்தின் கீழ் உள்ளதால் அவை கணக்காய்வுக்கு ஏற்றது என கணக்காய்வாளர் நாயகம் மற்றும் குழுவின் கருத்தாக இருந்தது. அதற்கமைய, இது தொடர்பில் இந்த விவகாரம் குறித்து பரிசீலித்து தேவையான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்குமாறு குழுவினால் அறிவுறுத்தப்பட்டது.

அடுத்த ஆண்டு ஜனவரியில் இந்தத் திணைக்களத்தை மீண்டும் குழு முன்னிலையில் அழைப்பதாக குழுவின் தலைவர் தெரிவித்தார்.

இராஜாங்க அமைச்சர் டயனா கமகே, பாராளுமன்ற உறுப்பினர்களான மனோ கணேசன், டி. வீரசிங்க, கலாநிதி ஹரிணி அமரசூரிய ஆகியோர் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

# யாழ்ப்பாண பொது நூலகம் எரிப்பு வவுனியாவில் நினைவுதினம்



யாழ்ப்பாணத்தில் பொது நூலகம் எரிக்கப்பட்டடு 42 ஆண்டுகள் கழிந்துள்ளன. இந்நிலையில், தமிழர் தாயக காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளால் ஏற்பாடு செய்யப்படட நினைவேந்தல் நிகழ்வு வவுனியாவில் அனுஷ்டிக்கப்பட்டது.

தமிழர் தாயக காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் தொடர்ந்து போராட்டம் நடத்திவரும் வவுனியா வீதி அபிவிருத்தித் திணைக்களத்துக்கு முன்பாகவுள்ள கொட்டகையில் குறித்த நிகழ்வுநேற்று இடம்பெற்றது.

இதன்போது அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், யாழ் பொதுநூல் நிலைய எரிப்பானது தமிழ் இன அழிப்பின் ஒரு வடிவம் எனக் குறிப்பிட்டனர்.

# யாழ்ப்பாணத்தில் டெங்கு நோய் பரவல் கட்டுப்பாட்டில் உள்ளது

## யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் டெங்கு நோய்ப் பரவல் கட்டுப்பாட்டில் உள்ளதாக யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.இக்கூட்டத்தில் யாழ். மாவட்ட டெங்கு ஒழிப்பு தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் இவ்விடயம் தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இவ்வருடம் ஜனவரி மாதத்திலிருந்து டெங்கு நோயின் தாக்கம் குறைவடைந்துள்ளது எனலாம். அதேபோல டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டமானது மாவட்டம் முழுவதிலும் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

குறிப்பாக, அண்மைய நாட்களில் டெங்கு நோயினால் உயிரிழப்பொன்று பதிவாகியுள்ளது. அதாவது, இராணுவ வீரர் ஒருவர் டெங்கு நோயினால் இறந்துள்ளார். எனினும், தற்பொழுது யாழ்ப்பாண மாவட்டத்தில் டெங்கு நோய்ப் பரவல் கட்டுப்பாட்டிலுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# மாணவன் மீது தாக்குதல்

தாக்குதலுக்கிலக்கான மாணவனொருவன் படுகாயமடைந்து வவுனியா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா பட்டானிச்சூர் பகுதியில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாகத் தெரிய வருவதாவது:-

மேற்படி தாக்குதலுக்கிலக்கான மாணவன் நேற்று முன்தினம் பள்ளி வாசலுக்குச் சென்று மாலை நேரத் தொழுகையை நிறைவேற்றிவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்தபோது அங்கு வந்த இளைஞர் குறித்த மாணவன் மீது இரும்பு மற்றும் பொல்லுகளால் சரமாரியாகத் தாக்குதல் மேற்கொண்டுள்ளார்.

தாக்குதலில் படுகாயமடைந்த மாணவன் மீட்கப்பட்டு வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# இலங்கை மாணவர்களுக்கு இந்தியாவில் புலமைப் பரிசில்கள்

BIMSTEC புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் 2023-24 கல்வியாண்டில் இந்தியாவிலுள்ள நாலந்தா பல்கலைக்கழகத்தில் கீழ்வரும் கற்கைநெறிகளைத் தொடர்வதற்காக இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

★வரலாற்று கற்கைகளில் MA மற்றும் PhD

★பௌத்த கற்கைகள், தத்துவம் மற்றும் மத ஒப்பீட்டு கற்கைகளில் MA மற்றும் PhD

★இந்து கற்கைகளில் (சனாதன தர்மம்) MA மற்றும் PhD சூழலியல் மற்றும் சுற்றுச்சூழல் கற்கைகளில் MSc மற்றும் PhD

★நிலைபேண்தகு அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவத்தில் MBA

★உலக இலக்கியம் (ஆங்கிலம்) MA மற்றும் PhD

இப்புலமைப்பரிசில் திட்டமானது அனுமதிக் கட்டணம், கற்கை நெறிக்கான கல்விக்கட்டணம், வதிவிட செலவுகள் மற்றும் மாதாந்தக் கொடுப்பனவு ஆகியவற்றுடன் ஒரு தடவைக்கான இருவழி பயணக் கொடுப்பனவையும் உள்ளடக்கியுள்ளது.

இத்திட்டம் குறித்த மேலதிக தகவல்களை https://nalandauniv.edu.in/admissions/ என்ற இணையதளத்தில் பெற்றுக்கொள்ள முடியும் அல்லது foreignstudents@nalandauniv.edu.in. என்ற மின்னஞ்சல் முகவரி மூலமாகவும் பெறமுடியும். விண்ணப்பிக்க விரும்புவோர் 2023 ஜூன் 10 ஆம் திகதிக்கு முன்னதாக (https://nalandauniv.edu.in/admissions/) இணையத்தளம் ஊடாக விண்ணப்பிக்குமாறும் வேண்டப்படுகின்றனர்.

# புகைத்தலினூடாக நாளொன்றுக்கு 55 பேர் வரை மரணிக்கின்றனர்

## பேராசிரியர் கலாநிதி அமரசிங்க தெரிவிப்பு









(அஷ்ரப் ஏ. சமத்)

புகைத்தலினூடாக நாளொன்றுக்கு 400 மில்லியன் ரூபாவை டுபாக்கோ நிறுவனத்துக்கு செலுத்துகின்றோம் என பேராசிரியர் கலாநிதி என்.ஆர். அமரசிங்க தெரிவித்தார். உலக புகையிலை எதிர்ப்பு தினம் பௌத்தமத விவகார அமைச்சின் அனுசரணையில் பௌத்த கலாசார அமைச்சின் கேட்போர் கூடத்தில நேற்று அனுஷ்டிக்கப்பட்டது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

பௌத்தமத விவகார அமைச்சின் மேலதிக செயலாளர், பொலிஸார், முப்படை அதிகாரிகள், கொழும்பிலுள்ள பாடசாலை மாணவர்கள், இளைஞர் - யுவதிகள் மற்றும் மும்மதத் தலைவர்கள் எனப் பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

அவர் மேலும் தெரிவிக்கையில், புகைத்தலினூடாக நாளொன்றுக்கு 400 மில்லியன் ரூபாவை டுபாக்கோ நிறுவனத்துக்கு செலுத்துகின்றோம். இந்நிதியை நாம் மீதப்படுத்தி தொழிற்பேட்டைகளை அமைத்தால் நூற்றுக்கணக்கான இளைஞர் - யுவதிகளுக்கு வேலைவாய்ப்புகளை பெற்றுக்கொடுக்கலாம்.

இலங்கையில் புகையிலை உட்கொண்டு புற்றுநோய், இருதய நோய், சுவாச நோய் என நாளொன்றுக்கு 55 பேர் வரை மரணிக்கின்றனர்.

ஒரு வருடத்துக்கு 20 ஆயிரம் பேர் வரை இதனால் உயிரிழக்கின்றனர். உலகில் வருடத்துக்கு 1.2 மில்லியன் பேர் புகைத்தலினால் இறக்கின்றார்கள்.

எதிர்கால கணவனைத் தேர்ந்தெடுக்கும் போது புகைத்தல்,போதைப்பழக்கங்களுக்கு அடிமையாகியுள்ளாரா என்பதை யுவதிகள் கவனத்தில் கொள்ளவேண்டும். அவ்வாறான பழக்கமுடையவர்களை திருமணம் முடிக்காதீர்கள். புகைத்தலுக்கடிமையானவரை மணந்தால் வாழ்க்கை நாசமாகிவிடும்.

புகைப்பிடிப்பவரிடமிருந்து உங்களுக்கு பிறக்கும் குழந்தைகள் கூட நோய்வாய்ப்பட்டு விடும். அவர் பெறும் வருமானத்தினால் கூட வாழ்க்கை நடத்த முடியாது போகும். இலங்கையில் பொது இடங்களில் புகைக்க முடியாது. அதற்கான சட்ட திட்டம் இலங்கை அரசாங்கத்தினால் வகுக்கப்பட்டுள்ளது.

இதற்குமாறாக அரச நிறுவனங்களில் புகைப்பதற்கு அல்லது சிகரெட் விற்பனை செய்வதற்கு வசதி செய்திருப்பின் அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியும். அதேபோன்று சிகரெட் குடிப்பவரை விளம்பரப்படுத்தினால் அதற்கும் 2 மில்லியன் ரூபா தண்டப்பணம் விதிக்க முடியும் எனவும் தெரிவித்தார்.

# சிறுமி பாலியல் துஷ்பிரயோகம் சந்தேகநபருக்கு விளக்கமறியல்

(கலஹா செய்தியாளர்)

எட்டு வயது சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்ட 62 வயதுடைய சந்தேக நபரை எதிர்வரும் 12 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கம்பளை மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதவான் நாமல் பெரேரா உத்தரவிட்டுள்ளதாக ஹெட்காலை பொலிஸார் தெரிவித்தனர்.

கம்பளை, ஹெட்காலை பிரதேச மரண நலன்புரிச் சங்கத்துக்கு நிதி சேகரிக்கும் வகையில் நேற்றுமுன்தினம் (30) செவ்வாய்க்கிழமை இசைக் கச்சேரியொன்று இடம்பெற்றது. பக்திப் பாடல் குழுவைச் சேர்ந்த மேற்குறிப்பிட்ட சிறுமி குறித்த நிகழ்வுக்குச் செல்வதற்காக ஆயத்தமாகிய நிலையில் தேவையொன்றின் நிமித்தம் பக்கத்திலுள்ள கடையொன்றுக்குச் சென்றுள்ளார்.

இதன்போது சிறுமி தனியாக கடைக்குச் செல்வதை அவதானித்த சந்தேக நபர் சிறுமியை ஏமாற்றி தனது வீட்டுக்கு அழைத்துச்சென்றே மேற்படி குற்றத்தைப் புரிந்துள்ளார். சிறுமி கடைக்குப்போய் வெகுநேரமாகியும் வீட்டுக்கு வராததால் சிறுமியின் தாயார் தேடிச்சென்றபோது சிறுமி சந்தேக நபர் வீட்டிலிருந்து வெளிவந்துள்ளார். சந்தேகமடைந்த தாயார் சிறுமியிடம் விசாரித்தபோதே நடந்தவற்றைக் கூறியுள்ளார்.

இதையடுத்து கம்பளை, ஹெட்காலை பொலிஸ் நிலைய சிறுவர் பாதுகாப்புப் பிரிவில் செய்த முறைப்பாட்டுக்கமைய சந்தேக நபரைக் கைது செய்து நேற்றுமுன்தினம் (30) மாலை கம்பளை மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தியபோதே அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

# பல்கலைக்கழகங்களுக்கு புதிய விரிவுரையாளர்களை இணைக்க அனுமதி

2000இற்கும் மேற்பட்ட பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கான பற்றாக்குறை நிலவுவதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக அனைத்து பல்கலைக்கழகங்களிலும் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

நிலைமையை சீர்செய்வதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருவதாக அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, பல்கலைக்கழகங்களுக்கு புதிய விரிவுரையாளர்களை இணைத்துக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு கடந்த வெள்ளிக்கிழமை இதற்கான அனுமதியை வழங்கியுள்ளது.

தேசிய லொத்தர் சபை National Lotteries Board

செவ்வாய்க்கிழமை 2023.05.30

உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5130 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 15,819,878.00
ஆங்கில எழுத்து F — வெற்றி இலக்கங்கள் 8 6 3 0 4 1

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3372 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 108,176,013.04
ஆங்கில எழுத்து S — வெற்றி இலக்கங்கள் 22 52 57 72

ஜாதிக சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 1585 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 11,621,741.20
வெற்றி இலக்கினம் — வெற்றி இலக்கங்கள் 4 1 4 1 6 3

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1160 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 92,197,406.00
ஆங்கில எழுத்து C — வெற்றி இலக்கங்கள் 08 20 28 51

ராசி சுப பலன் Handahana — சீட்டிழுப்பு இலக்கம் 439 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,857,610.20
வெற்றி இலக்கினம் கும்பம் — வெற்றி இலக்கங்கள் 09 15 22 34 — விசேட இலக்கினம் கும்பம்

Mega POWER — சீட்டிழுப்பு இலக்கம் 1478 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 325,671,078.00
ஆங்கில எழுத்து T — சுப்பர் இலக்கம் 08 — வெற்றி இலக்கங்கள் 51 52 53 58
ரூ. 10,000,000.00
ரூ. 10,000,000.00

# யாழுக்கு குடிநீர் கொண்டுவருவதில் அரசியல்வாதிகள் அசமந்தம்

## வடமாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் குற்றச்சாட்டு

*(யாழ். நிருபர்)*

யாழ்ப்பாணத்திற்கு குடிநீர் கொண்டுவருவதில் அரசியல்வாதிகள் அசமந்தப் போக்கைக் காட்டுவதாக வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் குற்றஞ்சாட்டினார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் யாழ்ப்பாணத்திற்கான குடிநீர் விநியோகம் தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணத்திற்கு குடிநீர் கொண்டு வருவதற்கான வேலைத்திட்டங்கள் ஆரம்பமாகி இடம்பெற்று வருகின்றன. குறிப்பாக, குழாய்கள் புதைக்கப்பட்டு வருகின்றன. ஆனால், குடிநீர் வழங்குவதற்கான குழாய் புதைக்கும் திட்டமானது நீண்டகாலமாக இடம்பெற்று வருகின்றது.

புதைக்கப்பட்டுள்ள குடிநீர்க் குழாய்களினூ டாக தற்போது காற்றுக் கூட வருகிறதோ தெரியவில்லை. இந்தக் குடிநீரைக் கொண்டுவருவதில் அரசியல்வாதிகள் அசமந்தப்போக்கைக் காட்டுகிறார்கள். இதுதான் உண்மை. குறிப்பாக, இந்த அரசியல்வாதிகள் எவரும் யாழுக்கான குடிநீர்ப் பிரச்சினை தொடர்பில் கதைத்ததாக தெரியவில்லை. அண்மையில் நான் புதிதாக கடமையேற்ற ஆளுநரிடமும் இந்த விடயம் குறித்துப் பேசியுள்ளேன். எனவே, குடிநீரைக் கொண்டுவருவதற்கு யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு ஏதாவது நடவடிக்கை எடுக்கவேண்டும். ஏற்கனவே நாங்கள் வடமாகாண சபையில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி அதனை பிரதமர் அலுவலகத்திற்கும் அனுப்பியிருந்தோம். எனவே, கிடப்பில் கிடக்கின்ற அந்தத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்த ஒருங்கிணைப்புக் குழு நடவடிக்கை எடுக்கவேண்டும் – என்றார்.

# மன்னார் அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் பல்வேறு விடயங்கள் தொடர்பில் ஆராய்வு





*(மன்னார் நகர் நிருபர்)*

நேற்று முன்தினம் (30) மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்டான்லி டி மெலின் நெறிப்படுத்தலின் கீழ் கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சரும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான காதர் மஸ்தான் தலைமையில் மன்னார் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் மன்னார் மாவட்ட செயலகத்தில் காலை 10 மணியளவில் ஆரம்பமானது.

இக்கூட்டம் பாராளுமன்ற உறுப்பினர்களான ரிஷாட் பதியுதீன், எஸ்.வினோ நோகராதலிங்கம், சார்ள்ஸ் நிர்மலநாதன், குலசிங்கம் திலீபன், வடமாகாண பிரதம செயலாளர் ஆகியோரின் பங்கேற்புடன் இடம்பெற்றது.

குறித்த அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் தாழ்நிலப் பிரதேசங்களில் காணப்படும் குளங்களை அவசரமாகப் புனரமைப்பது சம்பந்தமாகவும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை சம்பந்தமாகவும் தொடராகப் பேசப்பட்டுவரும் காணிப் பிரச்சினைக்கான தீர்வைப் பெற்றுக்கொடுப்பது சம்பந்தமாகவும் வீதி அபிவிருத்தி, கல்வி, சுகாதாரம், மீன்பிடி, வனவளம், நீர்ப்பாசனத் திணைக்களம், போக்குவரத்து, முன்பள்ளி ஆசிரியர்களுக்கான சம்பள முரண்பாடு போன்ற இதர விடயங்கள் தொடர்பிலும் விரிவாக ஆராயப்பட்டு தீர்வுகளும் எட்டப்பட்டன.

இந்த மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் மன்னார், நானாட்டான், முசலி, மாந்தை மேற்கு மற்றும் மடு ஆகிய 5 பிரதேச செயலகங்களின் பிரதேச செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், முப்படை பிரதானிகள், அரச பதவி நிலை உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

வடக்கு செய்திகள் thamilannorth@gmail.com

# நாய்களுக்கு வருடாவருடம் ஏ.ஆர்.வி. தடுப்பூசி கட்டாயம்

## மந்துவில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஜென்சன் தெரிவிப்பு



*(சாவகச்சேரி நிருபர்)*

நாய்களுக்கு வருடாவருடம் ஏ.ஆர்.வி தடுப்பூசி செலுத்த வேண்டியது அவசியம் என சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை எல்லைக்குட்பட்ட மந்துவில் பிரிவு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஜென்சன் றொனால்ட் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (30) மந்துவில் பிரதேசத்தில் வளர்ப்பு நாய்களுக்கான ஏ.ஆர்.வி. தடுப்பு மருந்து ஏற்றும் செயற்பாட்டின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்,

ஏ.ஆர்.வி. தடுப்பூசி செலுத்தாத நாய்களில் நீர்வெறுப்பு நோய்க்கான வைரஸ் காணப்படலாம். தடுப்பூசி செலுத்தாத நாய்களின் கடிக்குள்ளாவதால் மனிதனுக்கு வைரஸ் கடத்தப்படலாம். அதன்பின்னர் வைரஸ் பெருக்கம் அதிகரித்து அது நரம்புகளூடாக மூளையை அடைகையில் மனிதனுக்கு நீர் வெறுப்பு நிலைமை உருவாகும்.

நோய் நிலைமை உருவான மனிதனுக்கு எந்த சிகிச்சையும் பலனளிக்காது. இறப்பு நிச்சயமாக ஏற்படும். எனவே, உயிர்களைப் பாதுகாக்க வளர்ப்பு நாய்களுக்கு தவறாது வருடந்தோறும் ஏ.ஆர்.வி. தடுப்பூசி செலுத்துவோம். தொடர்ந்து 3 வருடங்கள் தடுப்பூசி செலுத்தாத நாய்க்கடிக்கு உள்ளானால் தவறாது மனிதர்களுக்கான ஏ.ஆர்.வி. தடுப்பூசியை முழுமையாகப் பெற்று எமது உயிர்களைப் பாதுகாக்க வேண்டும். வளர்ப்பு நாய்களை எமது வீட்டு வளவுக்குள் மட்டுமே நடமாட விடவேண்டும் – என்றார்.

# வவுனியா பொலிஸார் அதிரடி

*(வவுனியா நிருபர்)*

வவுனியாவில் அமைந்துள்ள குடிவரவு - குடியகல்வு பிராந்திய காரியாலயம் முன்பாக 10 பேர் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் (30.05) இரவு 11 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

வவுனியா குடிவரவு - குடியகல்வு பிராந்திய காரியாலயம் முன்பாக வரிசையில் பணிக்கு ஊழியர்களை அமர்த்தி, வரிசையைப் பெற்றுக்கொடுப்பதற்கு 5,000 ரூபாவும், வரிசையின்றி உரிய நடைமுறைகளுக்கு அப்பால் கடவுச்சீட்டைப் பெற்றுக்கொடுக்க 25,000 ரூபாவும் இடைத் தரகர்களினால் பெறப்படுவதாக செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்நிலையில், இரவு 11 மணியளவில் வவுனியாவிலுள்ள குடிவரவு - குடியகல்வு பிராந்திய காரியாலயம் முன்பாக சோதனை நடவடிக்கையில் ஈடுபட்ட வவுனியா பொலிஸார், தமது தேவைக்கல்லாது குறித்த பகுதியில் பணத்திற்காக வரிசையில் நின்றோர், சந்தேகத்திற்கிடமான முறையில் குறித்த காரியாலயம் முன்பாக இரவில் ஒன்றுகூடி நின்றோர் என சந்தேகத்தின்பேரில் 10 பேர் கைதுசெய்யப்பட்டனர் எனவும் மேலதிக விசாரணைகளின் பின் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் வவுனியா பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# மன்னார் மாவட்ட முச்சக்கரவண்டி சங்கத்தின் தலைவர் மீது தாக்குதல்

## பலத்த காயத்துடன் வைத்தியசாலையில் சேர்ப்பு

*(மன்னார் நகர் நிருபர்)*



மன்னார் மாவட்ட முச்சக்கரவண்டி சங்கத்தின் தலைவர் சசி என அழைக்கப்படும் சுப்பிரமணியம் சுவதீசன் (வயது-44) நேற்று செவ்வாய்க்கிழமை (30) மாலை 5 மணியளவில் மன்னார் பஸ் தரிப்பிடத்திற்கு முன் உள்ள முச்சக்கரவண்டித் தரிப்பிடத்தில் வைத்து குழு ஒன்றினால் கடுமையாகத் தாக்கப்பட்டு பலத்த காயமடைந்த நிலையில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இவ்விடயம் குறித்து பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வரும் மன்னார் மாவட்ட முச்சக்கரவண்டி சங்கத்தின் தலைவர் சுப்பிரமணியம் சுவதீசன் தெரிவிக்கையில்,

மன்னார் பஸ் தரிப்பிடத்திற்கு முன் உள்ள முச்சக்கரவண்டி தரிப்பிடப் பகுதியில் இன்று (நேற்று முன்தினம்) மாலை சிலர் முரண்பட்டுக்கொண்டிருந்தனர்.

எனவே, முச்சக்கரவண்டித் தலைவர் என்ற வகையில் குறித்த முரண்பாடு தொடர்பாக மன்னார் பொலிஸாருக்குத் தெரியப்படுத்த தொலைபேசி ஊடாகத் தொடர்பை ஏற்படுத்திக்கொண்டிருந்தேன்.

இதன்போது எமது சங்கத்தைச் சேர்ந்த 4 முச்சக்கரவண்டிச் சாரதிகள் மற்றும் அவர்களால் அழைத்துவரப்பட்ட சுமார் 20 பேருக்கும் மேற்பட்ட நபர்கள் என் மீது முச்சக்கரவண்டியில் வைத்து கொலைவெறித் தாக்குதலை மேற்கொண்டனர்.

எமது சங்கத்தின் முன்னாள் செயலாளரின் செயற்பாடு சரியில்லாத நிலையில் அவர் பொறுப்பிலிருந்து நீக்கப்பட்டார்.

முன்னாள் செயலாளருக்கு எதிராக முச்சக்கரவண்டி சங்கத்தினாலும் மன்னார் பொலிஸாரினாலும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதனால் அவருடன் சேர்ந்த ஒருசிலர் எங்களுடன் முரண்பட்ட நிலையில், இத்தாக்குதலின் பின்னணியில் என்னுடன் முரண்பட்ட 4 முச்சக்கர வண்டி ஓட்டுனர்களே இவ்வாறு என் மீது கடுமையாகத் தாக்கினர்.

தற்போது நான் பலத்த காயங்களுடன் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளேன். என்னைக் கொலை செய்யும் நோக்குடன் அவர்கள் என் மீது தாக்குதலை மேற்கொண்டனர். இது எனக்கும் எனது குடும்பத்திற்கும் பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது.

எனவே, சம்பவத்துடன் தொடர்புடைய எமது சங்கத்தைச் சேர்ந்த முச்சக்கரவண்டி ஓட்டுனர்கள் 4 பேரையும் அவர்களால் அழைத்து வரப்பட்டவர்களையும் பொலிஸார் கைதுசெய்து சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் – என்றார்.

**சனி, ஞாயிறு தினங்களில்**

# யாழ். தனியார் கல்வி நிலையங்களுக்கருகில் பொலிஸாரின் பிரசன்னத்தை அதிகரிக்கத் தீர்மானம்

சனி, ஞாயிறு தினங்களில் யாழ்ப்பாண மாவட்டத்தில் தனியார் கல்வி நிலையங்களுக்கருகாமையில் பொலிஸாரின் பிரசன்னத்தை அதிகரிப்பதற்கு யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் தனியார் வகுப்புகள் இடம்பெறும் இடங்களுக்கு அண்மையில் பொலிஸாரின் ரோந்து நடவடிக்கைகள் மற்றும் பாதுகாப்புக் கடமையில் பொலிஸாரை ஈடுபடுத்துமாறு ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் டக்ளஸ் தேவானந்தாவால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு நேற்று யாழ் .மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதோடு, குறித்த விடயத்தை தொடர்ந்து செயற்படுத்துவதாக யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரால் உறுதியளிக்கப்பட்டது.

கடந்த வாரம் முதல் தனியார் வகுப்பு நிலையங்களுக்கருகில் பொலிஸாரின் ரோந்து நடவடிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளதோடு பாதுகாப்பு நடவடிக்கையும் முன்னெடுக்கப் படுவதாகத் தெரிவித்திருந்தார்.

# கல்வி, சுகாதாரம், தொழில்நுட்பத்தை மலையகத்தில் மேம்படுத்தத் திட்டம்

## பில், மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளையினருடன் அமைச்சர் ஜீவன் சந்திப்பு



உலகில் முன்னணி சேவை நிறுவனங்களுள் ஒன்றான பில் மற்றும் மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளையூடாக மலையகத்தில் கல்வி, சுகாதாரம் மற்றும் தொழில்நுட்பத்தை மேம்படுத்துவது தொடர்பான கலந்துரையாடலொன்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தலைமையில் நேற்று (31) அமைச்சில் நடைபெற்றது.

பில் மற்றும் மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளையின் தலைமை அதிகாரிகள் இச்சந்திப்பில் பங்கேற்றிருந்தனர்.

அத்துடன், தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு அதிகார சபையின் தலைவர் நிஷாந்த ரணதுங்க, பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் பணிப்பாளர் பாரத் அருள்சாமி, அமைச்சரின் ஆலோசகர் ஹரித்த விக்ரமசிங்க, பிரத்தியேக செயலாளர் மொஹமட் காதர் ஆகியோரும் கலந்துரையாடலில் பங்கேற்றிருந்தனர்.

பில் மற்றும் மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளை ஊடாக இலங்கையில் முன்னெடுக்ககூடிய வேலைத்திட்டங்கள் தொடர்பில் இதன்போது விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

குறிப்பாக, மலையகப் பெருந்தோட்டப் பகுதிகளில் சிறார்களுக்கான போஷாக்கு ணவு, சுகாதார மேம்பாடு மற்றும் நவீன தொழில்நுட்பங்களைப் பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

அத்துடன், நீர்வழங்கலை டிஜிட்டல் மயமாக்குதல் உள்ளிட்ட சில விடயங்கள் பற்றியும் இரு தரப்பினரும் கலந்துரையாடியுள்ளனர்.

தலைமையகம் ஊடாக கலந்துரையாடி, முன்னேற்றகரமான வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படும் என அதிகாரிகள் அமைச்சரிடம் இதன்போது உறுதியளித்தனர்.

மலையக செய்திகள் thamilanmalayagam@gmail.com

# லோரன்ஸின் மறைவு மலையக மக்களுக்கு பெரும் இழப்பு

## ஆனந்தகுமார் இரங்கல்



மலையக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவர் அ.லோரன்ஸின் மறைவு பெரும் வேதனையளிக்கிறது. மலையக மக்களின் அரசியல் அபிலாஷைகளை வெற்றி கொள்வதில் தனது இளம் வயது முதல் பல்வேறு முயற்சிகளை எடுத்தவர். அவரின் இழப்பு எமது சமூகத்திற்கு மிகப்பெரிய இழப்பாகும் என ஜனாதிபதியின் கீழ் இயங்கும் தொழிற்சங்க முடிவுகளை எடுக்கும் மூவர் அடங்கிய குழுவின் உறுப்பினர்களில் ஒருவரான சுப்பையா ஆனந்தகுமார் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

லோரன்ஸ், ஒரு சிறந்த தொழிற்சங்கவாதியும் அரசியல் செயற்பாட்டாளருமாவார். இவர் இளம் வயது முதல் பல்வேறு மாணவர் அமைப்புகள், பல்கலைக்கழக அமைப்புகள் உட்பட அரசியல் கட்சிகளில் பங்குபற்றி தமது ஆளுமையை வெளிப்படுத்தியிருந்தார்.

அரசியலமைப்பு சீர்திருத்தங்களுக்கான பேச்சுவார்த்தைகள் கடந்த காலத்தில் முன்னெடுக்கப் பட்டபோது அனைத்து சந்தர்ப்பங்களிலும் மலையக மக்களுக் கான அரசியல் தீர்வுகள் தொடர்பில் தமது முன்மொழிவுகளை வழங்கியிருந்தார்.

அதேபோன்று மலையக மக்கள் முன்னணியில் நீண்டகாலமாக அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டதுடன், அக்கட்சியில் பல்வேறு பதவிகளையும் வகித்திருந்தார்.

பாராளுமன்றத்தில் அவரது குரல் ஒலிக்காத போதிலும் மக்களுக்காக பல்வேறு சேவைகளை ஆற்றிய ஒருவராகத் திகழ்ந்தார். அன்னாரை இழந்து சோகத்தில் தவிக்கும் அவரது குடும்பத்துடன் எனது துயரைப் பகிர்கிறேன். அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திப்பதாகவும் சுப்பையா ஆனந்தகுமார் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

# போராட்டங்களுக்காகத் தன்னை முழுமையாக அர்ப்பணித்தவர்

## லோரன்ஸின் மறைவுக்கு ராமேஷ்வரன் எம்.பி. அனுதாபம்

*(தலவாக்கலை செய்தியாளர்)*



பல்வேறு போராட்டங்களுக்கு மத்தியில் மக்களுக்காகத் தன்னை அர்ப்பணித்து சேவையாற்றிய மலையக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவர் லோரன்ஸின் மறைவு, மலையகத்துக்கும் மலையக மக்களுக்கும் பேரிழப்பாகும் என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும் நுவரெலியா மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஷ்வரன் தனது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

மலையக மக்கள் ஒரு தேசிய இனமாக மதிக்கப்பட வேண்டும், இந்நாட்டில் வாழ்கின்ற ஏனைய இனங்களுக்கு மத்தியில் ஓர் அரசியல் அங்கீகாரம் மலையக மக்களுக்கு கிடைக்க வேண்டும். மலையக மக்களுக்காக குரல் கொடுக்க வேண்டும் போன்ற உயரிய நோக்கிலேயே லோரன்ஸ் செயற்பட்டவர். மலையக மக்களின் அரசியல் அபிலாஷைகளை வெற்றிகொள்வதில் பெரும் பங்காற்றியவர். மலையக மக்கள் முன்னணியின் தலைவர் அமரர் பெரியசாமி சந்திரசேகரனுடன் மிக நீண்ட காலமாக அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டதுடன் அக்கட்சியில் பல்வேறு உயர் பதவிகளையும் வகித்துள்ளார். அமரர் லோரன்ஸ் அரசியலுக்கு அப்பால் ஒரு சிறந்த கல்விமான், சிறந்த எழுத்தாளர், சிறந்த தொழிற்சங்கவாதி எனப் பல பரிமாணங்களைக் கொண்டவர்.

அனைவருடனும் அன்பாகவும் பண்பாகவும் பழகக்கூடிய ஓர் எளிமையான மனிதர் லோரன்ஸ். தனது வாழ்நாளில் பெரும்பகுதியை சமூக மேம்பாட்டுக்காக அர்ப்பணித்திருந்தாலும் சமூகத்திடமிருந்து எவ்வித பிரதிபலனையும் எதிர்பார்க்காதவர். அன்னாரின் மறைவு மலையக சமூகத்துக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பாகும். அவரின் பிரிவால் வாடுகின்ற அன்னாரின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறேன் - என்றார்.

# தம்புள்ளையில் 12 வயது சிறுவன் மீது துஷ்பிரயோகம்

## சந்தேக நபர் கைது

*(கண்டி செய்தியாளர் )*

தம்புள்ளையில் 12 வயது சிறுவனொருவனை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் சந்தேக நபரொருவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக தேடப்பட்டு வந்த சந்தேக நபர் தம்புள்ளை பொலிஸ் நிலையத்தில் சரணடைந்ததையடுத்தே கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

தம்புள்ளை மாநகர சபை ஊழியர் ஒருவரே இவ்வாறு துஷ்பிரயோக நடவடிக்கையில் ஈடுபட்டதாகவும் பலமுறை அவர் முறைகேடாக நடந்துகொண்டுள்ளதாகவும் பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட சிறுவன் வைத்திய பரிசோதனைக்காக தம்புள்ளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் சந்தேக நபரை நீதவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# விவசாயத் துறையின் தரவுகள் டிஜிட்டல் மயம்

## ஜனாதிபதி செயலகத்தில் கலந்துரையாடல்







விவசாயத்துறையின் தரவுகளை டிஜிட்டல் மயப்படுத்துவது குறித்த கலந்துரையாடலொன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் நேற்றுமுன்தினம் (30) பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது.

குறித்த அரச நிறுவன அதிகாரிகளின் பங்களிப்புடன் இடம்பெற்ற இக் கலந்துரையாடலில் பில் அன்ட் மெலிண்டா கேட்ஸ் அமைப்பு (Bill and Melinda Gates foundation)உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

விவசாயத் துறையை நவீனமயமாக்கல், போஷாக்கு, காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வது மற்றும் நிதிப் பாதுகாப்பு ஆகிய துறைகளை அபிவிருத்தி செய்கையில் தரவு அடிப்படையிலான முடிவுகளை எடுப்பதற்கான அணுகுமுறை தொடர்பிலும் இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டதுடன் இது தொடர்பில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளைத் தொடருமாறு ஜனாதிபதி அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

இதற்கான நிதியுதவி மற்றும் நவீன தொழில்நுட்பத்தை வழங்குவது தொடர்பான அரசாங்கத்தின் கொள்கைகள் மற்றும் விதிமுறைகளுக்குட்பட்டு இந்த நடவடிக்கைகளில் பங்களிப்பு வழங்க முடியுமென்று ஜனாதிபதியிடம் உறுதியளித்த பில் அன்ட் மெலிண்டா கேட்ஸ் அமைப்பின் அதிகாரிகள், அது பற்றிய விடயங்களை விரிவாக முன்வைத்தனர்.

மேலும், உத்தேச காலநிலை மாற்றம் தொடர்பான பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் குறித்தும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

இக்கலந்துரையாடலில் தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக் குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜேவர்தன, பாதுகாப்புப் படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா, ஜனாதிபதி அலுவலகத்தின் மேலதிக செயலாளர்களான வேர்னன் பெரேரா, சாந்தனி விஜேவர்தன, கலாநிதி சுலக்ஷன ஜயவர்தன உள்ளிட்ட அதிகாரிகள், பில் அன்ட் மெலிண்டா கேட்ஸ் அமைப்பு மற்றும் சர்வோதய அமைப்பின் உறுப்பினர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

# தொலைக்காட்சி அலைவரிசைகள் தரப்படுத்தல் சரியானதாக இல்லை

## வெகுஜன ஊடக அமைச்சின் செயலாளர் அனுஷ பெல்பிட்ட





தொலைக்காட்சி அலைவரிசைகள் தரப்படுத்தப்படும் முறைமை (Rating) சரியானதாக இல்லை என்றும் அது முறையற்ற விதத்திலும் பக்கச்சார்பான வகையிலும் இடம்பெறுவதாகவும் வெகுஜன ஊடக அமைச்சின் செயலாளர் அனுஷ பெல்பிட்ட குற்றஞ்சுமத்தினார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தின் 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைகள் மற்றும் தற்போதைய செயலாற்றுகை தொடர்பில் விசாரணை செய்வதற்கு அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு (கோபா) அதன் தலைவர் இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தலைமையில் அண்மையில் (25) பாராளுமன்றத்தில் கூடியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

தரப்படுத்தலைக் கணக்கிடுவதற்கு எழுமாறாகத் தெரிவுசெய்யப்பட்ட சுமார் 400 தொலைக்காட்சிகளில் பொருத்தப்பட்டுள்ள உபகரணம் மூலம் தரவுகளைப் பெறுவதாக அனுஷ பெல்பிட்ட மேலும் தெரிவித்தார். இவற்றில் பிரதான ஊடக நிறுவனங்கள் அந்தத் தரப்படுத்தலைக் கணக்கிடும் நிறுவனங்களுக்கு பணம் செலுத்தி இந்த உபகரணம் பொருத்தப்பட்டுள்ள சுமார் 300 தொலைக்காட்சிகளை பெற்றுக்கொண்டுள்ளதாகவும் இதனால் பெறப்படும் தரவுகள் சரியானதாக இல்லையென்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், தனியார் ஊடகங்களை விட அரச ஊடகங்களுக்கு பொறுப்புகள் காணப்படுவதாகவும் அலைவரிசை தரப்படுத்தலில் முன்னோக்கி வரவேண்டும் என்ற நோக்கில் மாத்திரம் செயற்பட முடியாது எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும், ஊடகவியலாளர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்குவது தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டதுடன், மிகவும் சுறுசுறுப்பாக செய்திகளை வழங்குவதில் பங்களிக்கும் ஊடகவியலாளர்களை அங்கீகரிக்கும் முறைமை ஒன்றைத் தயாரிப்பது குறித்தும் குழுவில் கலந்துரையாடப்பட்டது.

அதேபோன்று, இந்தத் திணைக்களத்தின் பிரதான நோக்கங்களாக குறிப்பிடப்பட்டுள்ள 18 விடயங்கள் தொடர்பான தற்போதைய செயலாற்றுகை தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. விசேடமாக, வெளிவிவகார அமைச்சினூடாக உள்நாட்டுத் தகவல்கள் வெளிநாடுகளுக்கும் வெளிநாட்டுத் தகவல்கள் இந்நாட்டு மக்களுக்கும் வழங்குவதற்கு முறையான வேலைத்திட்டம் அமைப்பது தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

108 மில்லியன் ரூபா செலவில் பிரான்ஸிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட தற்பொழுது பயன்பாட்டில் இல்லாத தொழில்நுட்பத்துடன் கூடிய நெகடிவ் மற்றும் பொசிட்டிவ் படச்சுருள் பயன்படுத்தப்படும் உபகரணம் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டது. 1999 இல் இந்த உபகரணம் கொள்வனவு செய்யப்பட்டதாகவும் இந்தத் தொழில்நுட்பம் தற்பொழுது காலாவதியாகியுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர். அத்துடன் இந்த உபகரணம் ஒருமுறை கூடப் பயன்படுத்தப்படவில்லை என்றும் அது சீனச்சட்டியினால் தயாரிக்கப்பட்டுள்ளதால் இரும்புக்குக்கூட அதனை விற்பனை செய்யமுடியாது என்றும் அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

அதேபோன்று, சுயாதீனத் தொலைக்காட்சி சேவை மற்றும் தேசிய ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் என்பவற்றை இலாபமீட்டும் நிலைக்கு கொண்டுவருவது தொடர்பாகவும் அரசாங்கத் தகவல் திணைக்களத்தின் செயற்பாட்டுத் திட்டம் மற்றும் அதன் முன்னேற்றம் என்பன தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இக் கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர்களான டயனா கமகே, சாமர சம்பத் தசநாயக்க, பாராளுமன்ற உறுப்பினர்களான நிரோஷன் பெரேரா, ஜே.சி. அலவதுவல, ஜயந்த கெடகொட, சிவஞானம் சிறிதரன், கலாநிதி மேஜர் பிரதீப் உந்துகொட, எம்.டபிள்யூ.டி. பிரதீப் விதான, வீரசுமன வீரசிங்க மற்றும் மஞ்சுளா திசாநாயக்க ஆகியோர் கலந்து கொண்டனர்.

# இலங்கையில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி கிடைக்கவில்லை

## முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன்

(வெல்லாவெளி நிருபர்)

கொலையாளிகள் சுதந்திரமாக வெளியில் நடமாடுகின்றனர். உயிர் நீத்தவர்களை வருடா வருடம் நாம் நினைவு கூருகின்றோம்.இந்நாட்டில் பொதுமக்களுக்கோ ஊடகவியலாளர்களுக்கோ முழுமையான பாதுகாப்பு அரசாங்கத்தினால் வழங்கப்படவில்லை என மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் படுகொலை செய்யப்பட்ட சிரேஷ்ட ஊடகவியலாளர், நாட்டுப்பற்றாளர் ஐயாத்துரை நடேசனின் 19ஆவது நினைவேந்தல் நிகழ்வு நேற்று (31) மட்டக்களப்பு காந்தி பூங்காவில் அமைந்துள்ள படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களின் நினைவுத் தூபியில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், மட்டு.ஊடக அமையம், மட்டக்களப்பு மாவட்ட ஊடக தொழிற்சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில் ஊடகவியலாளர்கள், மதத் தலைவர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

ஊடகவியலாளர் நடேசன் 2004 மே 31ஆம் திகதி தனது அலுவலகத்துக்கு சென்றுகொண்டிருந்தபோது மட்டக்களப்பு எல்லை வீதியில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டார்.இவருடன் சேர்ந்து நாட்டிலே 46 ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள்.இவர்களுள் 36 தமிழர்களும் 8 சிங்களவர்களும் 2 முஸ்லிம்களும் உள்ளடங்குகின்றார்கள். இவ்வாறு படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு இதுவரை நீதி கிடைக்கவில்லை. ஊடகவியலாளர்கள் ஊடகம் சார்ந்து செயற்பட்டாலும் தமிழ் மக்களுக்கான அரசியல் அபிலாஷைகளையும் தீர்வுகளையும் மக்களின் எண்ணங்களையும் நிறைவேற்றிக்கொடுக்க வேண்டுமென ஊடகவியலாளர்கள் பேனாமுனையில் எழுதிக் கொண்டிருந்தார்கள். அவ்வாறு தமிழ் மக்கள் நலன்சார்ந்த விடயங்களை எழுதிய நடேசனையும் ஒட்டுக்குழுக்கள் விட்டுவைக்கவில்லை. இந்தப் படுகொலை தொடர்பாக நேரடியான சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டு கொலையாளிகள் இனங்காட்டப்பட்ட நிலையிலும் இதுவரையில் எந்த வித விசாரணைகளும் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படவில்லை.இவ்விடயம் மனித உரிமைமீறல் செயற்பாடாகும்.இதனை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இதேவேளை, போர்க்காலத்தில், இலங்கைப் படையினரின் ஒத்துழைப்புடன் பல தமிழ் ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்ட நிலையிலும் இதுவரையில் எந்த தமிழ் ஊடகவியலாளர்களின் படுகொலை தொடர்பிலும் முறையான விசாரணைகள் முன்னெடுக்கப்படவில்லை.

இந்த நாட்டில் தமிழ் மக்கள் மீதான அடக்குமுறைகளும் கெடுபிடிகளும் படுகொலைகளும் அதிகரித்தபோது அதற்கு எதிராகவும் அதனை வெளிச்சத்துக்கு கொண்டுவந்த பல தமிழ் ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.



உயர் பாதுகாப்பு வலயத்துக்குள்ளும் படையினர் அதிகமான பிரசன்னமான பகுதிகளிலும் வைத்து பல தமிழ் ஊடகவியலாளர்கள் வடக்கு, கிழக்கில் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். ஊடகவியலாளர்கள் படுகொலை குறித்த எவ்வித விசாரணையும் மேற்கொள்ளாது அரசாங்கம் காலம் கடத்தி வருவதுடன் தமிழ் ஊடகவியலாளர்கள் மீதான தொடர் அச்சுறுத்தலையும் மேற்கொண்டு வருகின்றது.

இதேபோன்று 2004மே 31ஆம் திகதி தனது அலுவலகத்துக்கு கடமைக்கு சென்று கொண்டிருந்தபோது ஊடகவியலாளர் ஐ.நடேசன் எல்லை வீதியில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டார்.

பலத்த பாதுகாப்புக்கும் மத்தியில் இருந்த அப்பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் சிலரின் பெயர்கள் தெரிவிக்கப்பட்டபோதிலும் அவர்கள் தொடர்பில் எந்த நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவும் இல்லை,அது தொடர்பில் விசாரணை செய்யப்படவுமில்லை என்றும் தெரிவித்தார்.

# கலாபூஷணம் ஸக்கியாவுக்கு "கவிநயம் சுடர் மணி" விருது

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)



இந்திய திண்டுக்கல் மாவட்டம், சின்னாளப்பட்டி, பசுமை வாசல் பவுண்டேஷன் நடத்திய கோடைக்கால "நட்சத்திர சுடர் மணி - 2023" விருதுகள் போட்டியில், கவிதைப் பிரிவில் இலங்கையிலிருந்து பங்கு பற்றிய சிரேஷ்ட எழுத்தாளரும் ஆசிரியரும் கவிஞருமான கலாபூஷணம் ஸக்கியா சித்திக் பரீட் "கவிநயம் சுடர் மணி" விருதைப் பெற்றுக் கொண்டார்.

இந்திய பசுமை வாசல் பவுண்டேஷன் தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக சமூகப்பணி, இலக்கியப் பணி, இயற்கைப் பணி எழுத்துப் பணியில் ஈடுபட்டு வருகின்ற பல்துறை சாதனையாளர்களுக்கு தொடர்ந்தும் பல தலைவர்களின் பெயரில் பிறந்த நாளுக்கு விருது வழங்கி வருகிறது. அந்த வகையில், கோடைகாலத்தில் தங்களது திறமைகளை வெளிக்கொணர்ந்து அவர்களின் படைப்புகளின் தன்மைகளை வெளிக்கொணரவும் முடங்கி கிடந்த படைப்பாளிகளை உலகறியச் செய்யவும் கதை, கவிதை, கட்டுரை, ஓவியம் ஆகிய போட்டிகளை நடத்தியது.

இப்போட்டியில் 600க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று வீதம் (31.05.2023)

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 185.5885 | 197.1168 |
| கனேடியன் டொலர் | 209.5190 | 222.1100 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 39.7377 | 42.8977 |
| யூரோ | 306.7422 | 323.7015 |
| ஜப்பான் யென் | 2.0525 | 2.1613 |
| சிங்கப்பூர் டொலர் | 211.2611 | 223.5897 |
| ஸ்ரேலிங் பவுன் | 355.6451 | 374.1182 |
| சுவிஸ் பிராங் | 314.2959 | 334.1211 |
| ஐ.அ. டொலர் | 287.8711 | 300.9210 |

| நாடு | நாணயம் | விற்பனை விதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 783.8236 |
| குவைட் | குவைட் தினார் | 960.9505 |
| ஓமான் | ஓமான் றியால் | 767.5474 |
| கட்டார் | கட்டார் றியால் | 81.0613 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 78.8035 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரப இராச்சிய திர்ஹம் | 80.4599 |



வத்தளை,ஹுணுப்பிட்டிய அருள்மிகு ஸ்ரீ முத்துக்குமரன் ஆலயத்தின் 21 ஆவது வருஷாபிஷேக அலங்கார உற்சவம் ஆலய பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ சி.சோதிரத்தினக் குருக்கள் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது இடம்பெற்ற வசந்த மண்டப பூஜையைத் தொடர்ந்து சுவாமிகள் உள்வீதி வலம் இடம்பெற்றது. ஆலய பரிபாலன சபையின் தலைவர்.எஸ். டீ.கனகேஷ்வரன், ரஜனிகாந் குடும்பம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.(படங்கள்: எம்.நசார்)



மட்டக்களப்பில் படுகொலை செய்யப்பட்ட சிரேஷ்ட ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசனின் 19ஆவது நினைவுதினம் மட்டக்களப்பு காந்தி பூங்காவில் அமைந்துள்ள படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களின் நினைவு தூபியில் புதன்கிழமை(31) அனுஷ்டிக்கப்பட்டது. மட்டு. தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், மட்டு. ஊடக அமையம், மட்டு. ஊடக தொழிற்சங்கம் என்பவற்றின் ஏற்பாட்டில் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர் வா. கிருஸ்ணகுமார் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது. இதன்போது, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன், ஊடகவியலாளர்கள், மதத் தலைவர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். இதன்போது, ஈகைச் சுடர் ஏற்றப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது. (கிரான், கல்லடி செய்தியாளர்கள், கனகராசா சரவணன்)

# கிழக்கு ஆளுநர் – கருணாகரம் எம்.பி. சந்திப்பு

(அப்துல்சலாம் யாசீம், கனகராசா சரவணன், கிண்ணியா, மட்டக்களப்பு, கிரான் செய்தியாளர்கள்)



கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானை மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் மற்றும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் பங்காளிக் கட்சிகளின் பிரதிநிதிகள் ஆகியோர் சந்தித்து கிழக்கில் காணப்படும் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடினர்.

ஆளுநர் செயலகத்தில் புதன்கிழமை(31) இடம்பெற்ற குறித்த சந்திப்பின்போது கிழக்கு மாகாணத்தில் காணப்படும் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடினர்.

இதன்போது மாகாண மற்றும் மாவட்ட ரீதியான பிரச்சினைகள் குறித்து ஆளுநரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டதுடன் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டுவரும் கொடுப்பனவுகளை அதிகரிப்பது தொடர்பாகவும் உள்ளூராட்சி மன்றங்கள் உட்பட அரசத் திணைக்களங்களில் அமைய அடிப்படையில் தொழில் புரியும் ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குதல், மட்டக்களப்பு மாவட்டத்தில் குருமன்வெளி, மண்டூர், குருக்கள் மடம், அம்பாலந்துறை, சந்திவெளி, திகிலிவெட்டை போன்ற பிரதேசங்களை இணைக்கும் ஆற்றின் இடையில் இருக்கும் பாதைகளுக்கு அறவிடப்படும் கட்டணங்களை நீக்குதல், பண்ணையாளர்களின் கால்நடைகள் துன்புறுத்தப்படுவதற்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் போன்ற பிரச்சினைகள் தொடர்பில் கோரிக்கைகளை முன்வைத்தனர்.

குறித்த பிரச்சினைகளைக் கவனத்திற்கொண்ட ஆளுநர், இவை தொடர்பில் ஆராய்ந்து தீர்வு வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக உறுதியளித்தார்.

கிழக்கு செய்திகள்
eastthamllan@gmail.com



சர்வதேச புகைத்தல் மது எதிர்ப்பு தினம் - 2023 முன்னிட்டு 'புகைத்தலிலிருந்து மீண்ட ஒரு கிராமம் மகிழ்ச்சி நிறைந்த புதியதோர் தேசம்' எனும் தொனிப்பொருளில் மண்முனை தென் எருவில் பற்று, களுவாஞ்சிகுடி பிரதேச செயலகத்தின் விழிப்புணர்வு நிகழ்வு உதவி பிரதேச செயலாளர் திருமதி சத்தியகௌரி தரணிதரன் தலைமையில் பிரதேச செயலக ஒன்றுகூடல் மண்டபத்தில் புதன்கிழமை(31) நடைபெற்றது.



சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் ஏ.எம்.ஹமீட் தலைமையில் அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் விழிப்புணர்வு நிகழ்வு புதன்கிழமை(31) இடம்பெற்றது. இதன்போது அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் இஸ்மாயில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். மேலும் உதவி பிரதேச செயலாளர் நஹிஜா முசாபிர், ஏனைய சமுர்த்தி முகாமையாளர்கள், சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்களும் கலந்து கொண்டனர். (திராய்க்கேணி செய்தியாளர்)



மட்டக்களப்பு மண்முனை - தென்முனை, தென்எருவில் பற்று பிரதேச சபைக்குட்பட்ட குருக்கள்மடம் பொதுநூலக வாசகர் வட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட தரம் 05 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சைக்கான விசேட கருத்தரங்கு செவ்வாய்க்கிழமை(30) நூலகப்பொறுப்பாளர் தவராசா ஜெயசித்ரா தலைமையில் இடம்பெற்றது.

# சவூதி பிரஜை வாழைச்சேனை ஆதார வைத்தியசாலைக்கு உதவி

(மீராவோடை செய்தியாளர்)



வாழைச்சேனை ஆதார வைத்தியசாலைக்கு ஒருதொகை மின்விசிறிகளும் மின்குமிழ்களும் அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளன. இலங்கைக்கு சுற்றுலா வந்துள்ள சவூதி நாட்டைச் சேர்ந்த முதீப் அஸ்ஸபீயிடம் அல்-கிம்மா நிறுவனம் முன்வைத்த வேண்டுகோளுக்கமைய மின் குமிழ்களையும் மின் விசிறிகளையும் திங்கட்கிழமை (29) அன்பளிப்பு செய்துள்ளார்.

அல்-கிம்மா நிறுவனப் பணிப்பாளர் அஷ்-ஷெய்க் எம்.எம்.ஹாரூன் ஸஹ்வி தலைமையில் இடம்பெற்ற குறித்த பொருட்களை கையளிக்கும் நிகழ்வில் சவூதி நாட்டைச் சேர்ந்த முதீப் அஸ்ஸபீ, வாழைச்சேனை வைத்தியசாலை அத்தியட்சகர் எப்.பி.மதன், நிர்வாக உத்தியோகத்தர் எம்.ஜெமீல் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# காத்தான்குடியில் சூழல் நலன் சார் வேலைத்திட்டங்கள் முன்னெடுப்பு



(காத்தான்குடி செய்தியாளர்)

மத்திய சுற்றாடல் அமைச்சினால் மே 30ஆம் திகதி தொடக்கம் ஜூன் 05ஆம் திகதிவரை தேசிய சுற்றாடல் வாரமாக பிரகடனப்படுத்தப்பட்டு நாடு முழுவதும் பல்வேறு சூழல் நலன் சார் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் காத்தான்குடி நகரசபை, மத்திய சுற்றாடல் அதிகார சபையின் மட்டக்களப்பு மாவட்ட அலுவலகத்துடன் இணைந்து மர நடுகை வேலைத்திட்டம் ஒன்று காத்தான்குடி வாவிக்கரை பகுதியில் செவ்வாய்க்கிழமை(30) ஆரம்பித்து வைக்கப்பட்டது.

முதற்கட்டமாக, காத்தான்குடி 5ஆம் குறிச்சி மஸ்ஜித் குபா அருகில் மரக்கன்றுகள் நடப்பட்டன. இந்நிகழ்வில் நகர சபை நிர்வாக உத்தியோகத்தர் எம்.ஐ.எம்.நியாஸ், கணக்காளர் ஏ.எஸ்.மனாஸிர் அஹ்சன், மாவட்ட சுற்றாடல் உத்தியோகத்தர் திருமதி பாஸ்கரன், மஸ்ஜித் குபா பள்ளிவாசல் நிர்வாகிகள் மற்றும் காத்தான்குடி நகர சபை உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

மேலும், காத்தான்குடி வாவிக்கரையோரப் பிரதேசத்தினை ஒரு சுற்றாடல் நேய பிரதேசமாக மாற்றுவதற்கும் நிலைத்து நிற்கும் அபிவிருத்தி வேலைத்திட்டங்களில் உள்வாங்கப்பட்டு தொடர்ச்சியாக இப்பிரதேசத்தினை பொது மக்களுக்கான ஓய்வெடுக்கும் சுத்தமான இடமாக மாற்றுவதற்கும் அனைவரினதும் ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாகவும் இதன்போது தெரிவிக்கப்பட்டது.



தேசிய சுற்றாடல் தினத்தை முன்னிட்டு 'வளி மாசாக்கம் மற்றும் அதன் பாதகமான தாக்கங்களை குறைக்கும் தினம்' எனும் தொனிப்பொருளில் பொது மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் வகையில் துவிச்சக்கரவண்டி சவாரி புதன்கிழமை(31) களுவாஞ்சிக்குடி பிரதேச செயலக முன்றலிலிருந்து ஆரம்பிக்கப்பட்டது. பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னத்தின் வழிகாட்டுதலில் இடம்பெற்ற இந்நிகழ்வில், உதவி பிரதேச செயலாளர் திருமதி சத்யகௌரி தரணிதரன் மற்றும் கணக்காளர் சா.விக்னராஜா ஆகியோர் கலந்துகொண்டு நிகழ்வினை ஆரம்பித்து வைத்தனர். மேலும், 100க்கும் மேற்பட்ட அலுவலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டிருந்தனர். (குருக்கள் மடம்)



உலக புகைத்தல் தினத்தை முன்னிட்டு வாழைச்சேனை பகுதியில் விழிப்பூட்டல் நிகழ்வொன்று புதன்கிழமை (31) இடம்பெற்றது. கோறளைப்பற்று மத்தி வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் ஏற்பாடு செய்திருந்த இந்நிகழ்வு சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.ரீ.எம்.நஜீப்கான் தலைமையில் இடம்பெற்றது. வாழைச்சேனை பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்கள் மற்றும் பொதுமக்கள் ஒன்றுகூடும் இடங்களுக்கு சென்ற வைத்திய அதிகாரியின் தலைமையிலான குழுவினர் துண்டுப் பிரசுரங்கள் விநியோகம் செய்து, புகைத்தல் பாவனையால் ஏற்படும் விபரீதங்கள் தொடர்பான வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியவாறு விழிப்பூட்டல் நிகழ்வில் ஈடுபட்டனர். (மீராவோடை செய்தியாளர்)

# காரைதீவில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை



(காரைதீவு, மாளிகைக்காடு செய்தியாளர்கள்)



நாட்டில் ஏற்பட்டுள்ள டெங்கு நுளம்பு பெருக்கத்தை தடுக்கும் முகமாக காரைதீவு பிரதேச செயலக சமூக சேவைப்பிரிவு, அனர்த்த முகாமைத்துவப்பிரிவு மற்றும் உளவளப் பிரிவு உத்தியோகத்தர்களின் ஆதரவு மற்றும் பங்குபற்றலுடன் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை பிரதேச செயலாளர் எஸ்.ஜெகராஜனின் வழிகாட்டலின் கீழ் இடம்பெற்றது.

கிராம உத்தியோகத்தர்களின் ஒருங்கிணைப்புடன் காரைதீவு 01 மற்றும் காரைதீவு 06 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் பொதுமக்களின் ஒத்துழைப்புடன் காரைதீவு கண்ணகி அம்மன் ஆலயம் மற்றும் அதனை சூழவுள்ள பகுதிகளில் டெங்கு ஒழிப்பு சிரமதானம் நடைபெற்றது. இதன்போது ஆலயத்தை சூழவுள்ள வடிகான்கள் அனைத்தும் சுத்தம் செய்யப்பட்டன. இச் சிரமதானத்தில் காரைதீவு பிரதேச செயலக அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.



ஜூன் 5ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ள தேசிய சுற்றாடல் தினத்தை முன்னிட்டு பிரகடனம் செய்யப்பட்டுள்ள சுற்றாடல் வாரத்தின் முதல் நாளான செவ்வாய்க்கிழமை(30) ஏறாவூர் நகரசபை வளாகத்தில் பயன்தரும் பழமரக்கன்றுகள் நடப்பட்டன. நகர சபை செயலாளர் எம்.எச்.எம்.ஹமீம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், ஏறாவூர் விவசாய போதனாசிரியர் முர்ஷிதா ஷிரீன், நகரசபை நிர்வாக உத்தியோகத்தர் திருமதி நபீரா றசீன், பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் திருமதி சாஜிதா பர்வின், அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.சி.எம்.சப்றாஸ் உட்பட உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

# அம்பாறையில் பல பகுதிகளில் பெற்றோல் தட்டுப்பாடு: மக்கள் மீண்டும் வரிசையில்



(பாறுக் ஷிஹான், ஆலையடிவேம்பு செய்தியாளர்)

அம்பாறையில் மீண்டும் எரிபொருள் நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலையில், அதனைப் பெற்றுக்கொள்வதற்கு வாகன சாரதிகள் முண்டியடிக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளனர்.

அம்பாறை மாவட்டம் கல்முனை, சாய்ந்தமருது, மருதமுனை, ஆலையடிவேம்பு உள்ளிட்ட பகுதிகளில் செவ்வாய்க்கிழமை(30) இரவு முதல் பெற்றோலை பெறுவதற்கு எரிபொருள் நிலையங்களுக்கு சாரதிகள் வருகை தந்ததை காண முடிந்தது.

கடந்த காலங்களில்QR முறைமையினால் சீராக மேற்கொள்ளப்பட்ட எரிபொருள் விநியோகம் திடீரென இவ்வாறு நெருக்கடிக்குள்ளானமை மக்கள் மத்தியில் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இதனால் மக்கள் கடந்த காலங்களில் போன்று எரிபொருள் நிலையத்தை சூழ ஒன்று கூடியவாறு நிற்பதையும் அதிகளவான வாகனங்கள் எரிபொருள் நிலையங்களை நாடி செல்வதையும் காண முடிந்தது.

மேலும் நாடளாவிய ரீதியில் மீண்டும் எரிபொருளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக செய்திகள் வெளிவந்த வண்ணம் உள்ளமையும் சுட்டிக்காட்டத்தக்கது.

## தண்டப்பணம்

(கோணாவத்தை செய்தியாளர்)

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவில் அனுமதிப்பத்திர நிபந்தனையை மீறி மணல் ஏற்றி வந்த உழவு இயந்திர உரிமையாளருக்கு அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தினால் தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

அனுமதிப்பத்திர நிபந்தனையை மீறி மணல் ஏற்றி வந்த உழவு இயந்திரத்தை அக்கரைப்பற்று பொலிஸார் கைப்பற்றியிருந்தனர். கைப்பற்றப்பட்டிருந்த வாகனத்தை அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் நீதிபதி எம்.எச்.எம்.ஹம்ஸா முன்னிலையில் வியாழக்கிழமை ஆஜர்படுத்தியபோது, 15ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டது. வாகன உரிமையாளரினால் குறித்த தண்டப்பணம் செலுத்தப்பட்டதோடு வாகனமும் விடுவிக்கப்பட்டது.



கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் மாகாணத்தின் தற்போதைய சட்ட ஒழுங்கு மற்றும் பிற பிரச்சினைகள் குறித்து பொலிஸ் தலைமையகத்தில் பொலிஸ் மா அதிபர் மற்றும் பிரதி பொலிஸ் மா அதிபர் ஆகியோருடன் கலந்துரையாடியதோடு, சட்டவிரோத போதைப்பொருட்களை ஒழிப்பது, கடற்கரைகள் மற்றும் பொது இடங்களில் குப்பைக் கொட்டுபவர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுப்பது குறித்தும் இதன்போது கலந்துரையாடியதாக ஆளுநர் அலுவலகம் அறிவித்துள்ளது.

(கந்தளாய் செய்தியாளர்)

## விளக்கமறியல்

(கோணாவத்தை செய்தியாளர்)

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாலமுனை பிரதேசத்தில் 750 மில்லிகிராம் கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சந்தேக நபர் கஞ்சா வைத்திருந்தமை தொடர்பாக அக்கரைப்பற்று பொலிஸாருக்கு கிடைத்த தகவலைத் தொடர்ந்து, உப பொலிஸ் பரிசோதகர் ஹஸீர் தலைமையிலான பொலிஸ் குழுவினர் குறித்த பிரதேசத்துக்குச் சென்று நபரை கைது செய்து திங்கட்கிழமை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர். இதன்போதே சந்தேக நபரை ஜூன் 13ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்ற நீதிபதி எம்.எச்.எம்.ஹம்ஸா உத்தரவிட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கிழக்கில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறைக்கு தீர்வு

## ஆளுநரிடம் கல்வியமைச்சர் உறுதி



(கந்தளாய், சீனக்குடா, கிண்ணியா, கல்லடி செய்தியாளர்கள், மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தில் 4ஆயிரத்து 200 ஆசிரியர் பற்றாக்குறை காணப்படும் நிலையில் அதற்கு விரைவில் தீர்வு வழங்குவதாக கல்வியமைச்சர் சுசில் பிரேம ஜயந்த, கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானிடம் உறுதியளித்தார்.

கல்வியமைச்சில் செவ்வாய்க்கிழமை(30) இடம்பெற்ற கலந்துரையாடலில், கிழக்கு மாகாணத்தில் 4ஆயிரத்து 200 ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுவதாகவும் அதற்கு நிரந்தரத் தீர்வினை காண்பதற்காக ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட வேண்டும் எனவும் ஆளுநர் கல்வியமைச்சரிடம் கோரிக்கை விடுத்தார்.

ஆளுநரின் கோரிக்கையை ஏற்று, ஆசிரியர் பற்றாக்குறையை கூடிய விரைவில் நிவர்த்தி செய்வதாக உறுதியளித்த கல்வியமைச்சர், அதற்கு முதல் கட்டமாக மூன்று மாதக்காலத்துக்குள் பட்டதாரி ஆசிரியர்கள், கல்வியியற் கல்லூரியில் இருந்து வெளியாகும் ஆசிரியர்களைக் கொண்டு பற்றாக்குறை உள்ள பாடசாலைகளுக்கு நியமனம் வழங்குவதாக உறுதியளித்தார்.

இதன்போது கிழக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர், ஆளுநரின் சிரேஷ்ட ஆலோசகர் டாக்டர் அமல் அரசடி சில்வா ஆகியோர் கலந்துகொண்டனர்.

கிழக்கு
செய்திகள்
eastthamilan@gmail.com

# கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தொழிற்சந்தை





(மாளிகைக்காடு செய்தியாளர்)

Sri Lanka Association for Software Services Companies - SLASSCOM இன் ஏற்பாட்டில் கிழக்குப் பல்கலைக்கழக தொழில் வழிகாட்டல் பிரிவின் அனுசரணையுடன் இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தொழிற்சந்தை இடம்பெற்றது.

தொழில் வழிகாட்டல் பிரிவு பணிப்பாளர் பேராசிரியர் அரசரெத்தினம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் வ.கணகசிங்கம் அதிதியாகவும் SLASSCOM நிறுவனத் தலைவர் ஆஷிக் அலி சிறப்பு பேச்சாளராகவும் கலந்து கொண்டனர்.

அங்குரார்ப்பண நிகழ்வு, தொழில் வழிகாட்டல் நிகழ்வு மற்றும் தொழிற் சந்தை என மூன்று அமர்வுகளாக நடைபெற்ற இத்தொழிற்சந்தையில், இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வந்தாறுமூலையில் அமைந்துள்ள கலை கலாசாரம், வர்த்தக முகாமைத்துவம், விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் திருகோணமலை வளாகத்தின் பிரயோக விஞ்ஞானம், தொடர்பாடல் மற்றும் வணிகக்கல்விப் பீடங்களைச் சேர்ந்த இளம் பட்டதாரிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

அங்குரார்ப்பண மற்றும் தொழில் வழிகாட்டல் அமர்வுகள் காலை நேர நிகழ்வாக கலை கலாசார பீட கேட்போர் கூடத்திலும் தொழிற்சந்தை மாலை நேர நிகழ்வாக நல்லையா கேட்போர் கூடத்திலும் இடம்பெற்றது. இதன்போது பிரதி உபவேந்தர் பேராசிரியர் கருணாகரன், வர்த்தக முகாமைத்துவ பீட பீடாதிபதி கலாநிதி ஜெயராஜா, தொழில்நுட்ப பீட பீடாதிபதி கலாநிதி மதிவேந்தன், கலை கலாசார பீட பீடாதிபதி கலாநிதி குணபாலசிங்கம், பதிவாளர் பகிரதன் மற்றும் பல்கலைக்கழக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பப் பிரிவு பணிப்பாளர் மற்றும் அதன் விரிவுரையாளர்கள், பீடங்களின் விரிவுரையாளர்களும் கலந்து கொண்டனர்.

உபவேந்தர் பேராசிரியர் வ.கணகசிங்கம் ஆரம்பித்து வைத்த தொழிற்சந்தையில், இலங்கையின் முன்னணி நிறுவனங்களின் கூடங்கள் நிறுவப்பட்டிருந்தன. இக்கூடங்களில் மாணவர்களுக்கான உடனடி நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்பட்டதுடன் இளம் பட்டதாரிகள் பயிலுனர்களாக இணைந்து கொள்வதற்கான வாய்ப்புகளும் வழங்கப்பட்டது. மேலும், பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்புகளுக்கான சந்தர்ப்பங்களும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன.

மேலும், இளம் பட்டதாரிகள் பல்கலைக்கழக கல்வியைப் பூர்த்திசெய்து கொண்டதோடு எவ்வாறு தொழில் உலகுக்குள் பிரவேசிப்பது என்பது தொடர்பான தொழில் வழிகாட்டல் ஆலோசனைகளை பல்வேறு நிறுவனங்கள் வழங்கியதுடன், இளம் பட்டதாரிகள் மற்றும் பட்டதாரிகளின் சுயவிபரத் தரவுகள் சேகரிக்கப்பட்டு அவர்களுக்கான தொழில்வாய்ப்பு தளங்கள் பற்றிய அறிவுரைகளும் வழங்கப்பட்டன.

# ஏறாவூர் நகர சபை ஏற்பாட்டில் இடம்பெற்ற இரத்ததான முகாம்



(ஏறாவூர் செய்தியாளர்)

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அண்மைக்காலமாக நிலவுகின்ற இரத்தத் தட்டுப்பாட்டினையடுத்து, ஏறாவூர் நகர சபையினால் ஏற்பாடு செய்யப்பட்ட இரத்ததான முகாம் புதன்கிழமை(31) நடைபெற்றது.

நகர சபை செயலாளரும் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தருமான எம்.எச்.எம்.ஹமீம் தலைமையில் நடைபெற்ற இவ்இரத்ததான முகாமில் நகர சபை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் மற்றும் பொதுமக்களும் ஆர்வத்துடன் கலந்து கொண்டிருந்தனர்.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கி வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் ஊழியர்களுடன் ஏறாவூர் ஆதார வைத்தியசாலையின் உத்தியோகத்தர்களும் இணைந்து இரத்ததான முகாமை வழிநடத்தினர். ஐம்பதுக்கும் மேற்பட்டவர்கள் இதன்போது இரத்த தானம் செய்ததாக தெரிவிக்கப்படுகிறது.

சமீபகாலமாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் இரத்தத் தட்டுப்பாடு நிலவுவதனால் பல நோயாளர்கள் உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலைமையினைக் கருத்திற்கொண்டு இரத்ததான முகாம் ஒழுங்கு செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

# எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை கையாளல் தொடர்பில் வழிகாட்டல் கருத்தரங்கு

(பாறுக் ஷிஹான்)




இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் கல்முனை பிராந்திய நிலையத்தின் ஏற்பாட்டில் பொதுமக்களின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை கையாளுதல் தொடர்பில் அரசாங்கத்துக்கு மற்றும் சட்டத்தை அமுலாக்கும் அதிகாரிகளுக்கு சிபாரிசு செய்யும் வழிகாட்டல்கள் தொடர்பிலான கலந்துரையாடல் புதன்கிழமை(31) இடம்பெற்றது.

கல்முனை பிராந்திய மனித உரிமை ஆணைக்குழுவின் மண்டபத்தில் கல்முனை பிராந்திய இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரி ஏ.சி.அப்துல் அஸீஸ் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட கலந்துரையாடலின்போது, பொதுமக்களின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை கையாளுதல் தொடர்பிலான ஆணைக்குழுவின் வழிகாட்டல்கள் தனிமனித சுதந்திரத்தை பாதுகாக்கும் என குறிப்பிட்டார்.

மேலும், பிராந்திய மட்டத்தில் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட குறித்த வழிகாட்டல்களை அறிமுகப்படுத்துவதுடன் இது பற்றிய அபிப்பிராயங்களை பங்குபற்றுனர்களிடமிருந்து பெற்று அதனை ஆணைக்குழு உள்வாங்குவதேயாகும் எனவும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு 2022ஆம் ஆண்டில் எமது நாட்டில் இடம்பெற்ற பொதுமக்களின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை மிகவும் உன்னிப்பாக கண்காணித்ததுடன், இந்த ஆர்ப்பாட்டங்களின்போது நிகழ்ந்த மனித உரிமைகள் மீறல்களுக்கு எதிராக விசாரணைகளை நடத்தியுள்ளது எனவும் தெரிவித்தார்.

அத்துடன் அரசியலமைப்பில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளபடி, அமைதியான எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களின்போது மனித உரிமையை பாதுகாப்பதற்கும் எதிர்காலத்தில் அத்தகைய எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களின்போது அடிப்படை உரிமைகள் மீறப்படுவதைத் தவிர்ப்பதற்கும் காத்திரமான நடவடிக்கைகளை எடுக்க அரசாங்கத்துக்கு ஆலோசனை கூறும் அதிகாரம் இருப்பதால் ஆணைக்குழு இந்த வழிகாட்டல்கள் மூலம் அப்பணியைச் செய்கிறது என்றார்.

இந்நிகழ்வின் போது பொலிஸ் அதிகாரிகள், சுகாதாரத் துறை அதிகாரிகள், கல்வித் திணைக்கள அதிகாரிகள், அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் உட்பட சிவில் குழு உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

## போடியார் புலம்பல்!



நீதி அமைச்சரிட நடமாடும் சேவை ஒண்டு போன சனிக்கிழம மட்டக்களப்புல நடந்தது எலுவா? அந்த அமைச்சரிட்ட பயங்கரவாத தட சட்டத்த முழுமையாக நீக்கவேண்டும்.. அந்த சட்டம் உள்ளவரை இந்த நாட்டில நீதியும் இல்ல நியாயமும் இல்ல எண்டத அங்கு எடுத்துச்சொல்லியிருக்கலாம்.. ஆனா அங்கு போனவங்க எல்லாம் சும்மா வாயப்பார்த்து வாழ்த்துக்கூறியதுதான் மிச்சம்! பந்தம் புடிச்சு சலுகை பெறுர கிழக்கு மீட்பார்கள் ரெண்டுபேரும் உள்ளவரை மட்டக்களப்புக்கு நாசம்தான் நடக்கும் எண்டது இந்த நடமாடும் சேவயிலயும் பிரதி பலிச்சது..!



சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு அக்கரைப்பற்று பிரதேச செயலக சமுர்த்திப் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட நடைபவனி சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் எம்.ஹுசைன் தலைமையில் புதன்கிழமை(31) இடம்பெற்றது. இந்நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர், ஏனைய சமுர்த்தி முகாமையாளர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்களும் கலந்துகொண்டு விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக ஊர்வலமாக அக்கரைப்பற்று பிரதேச செயலகத்திலிருந்து அக்கரைப்பற்று வைத்தியசாலை வரை நடைபவனி சென்றனர். (திராய்க்கேணி செய்தியாளர்)

# கிழக்கு கடற்கரைகளும் நகரங்களும் தூய்மையானதாக இருக்க வேண்டும்

## உள்ளூராட்சி அதிகாரிகளுக்கு ஆளுநர் பணிப்பு

(புளியந்தீவு செய்தியாளர்)

கிழக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து நகரங்களும் கடற்கரைகளும் தூய்மையும் நேர்த்தியும் கொண்டதாக எப்போதும் இருக்க வேண்டும். இவைகளை கண்காணித்து செயற்படுத்த வேண்டிய பொறுப்பு உள்ளூராட்சி அதிகாரிகளையே சேர்ந்ததென கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் அதிகாரிகளுக்கு தெளிவுபடுத்தினார்.

இது தொடர்பான கலந்துரையாடல் ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெற்றபோதே இவ்வாறு தெரிவித்தார். கடற்கரைகளினதும் நகரங்களினதும் தூய்மையையும் நேர்த்தியையும் பேணி பாதுகாக்க வேண்டிய பொறுப்பு உள்ளூராட்சி திணைக்களத்தைச் சேர்ந்தது. ஆயினும், அவை சரிவர இடம்பெறுவதாக தெரியவில்லை. பொது மக்களும் வியாபாரிகளும் நகரங்களையும் கடற்கரை பிரதேசங்களையும் அசுத்தப்படுத்தலாம். இது சாதாரணமானது. அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டிய பொறுப்பு உள்ளூராட்சித் திணைக்கள அதிகாரிகளுக்குள்ளது.

தட்டிக்கேட்க வேண்டியவர்கள் சத்தமின்றி இருப்பது பாரிய தவறு.

எனவே, இவ்விடயத்தில் பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டும். அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கத் தவறினால் கிழக்கு மாகாண சபை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்விடயத்தில் கூடிய கவனம் செலுத்தி செயற்பட வேண்டும் என ஆளுநர் மேலும் கேட்டுக்கொண்டார்.

# வீதியால் சென்றவர் மீது கூரிய ஆயுதத்தால் வெட்டு

(பாறுக் ஷிஹான்)

கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அக்கரைப்பற்று - கல்முனை பிரதான வீதியில் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த நபர் மீது மற்றுமொரு மோட்டார் சைக்கிளில் வருகை தந்த இருவர் கூரிய ஆயுதத்தினால் வெட்டி காயப்படுத்தி விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் புதன்கிழமை(31) காலை இடம்பெற்றுள்ளது. இதன்போது 41 வயது மதிக்கத்தக்க மேசன் வேலை செய்யும் குடும்பஸ்தர் ஒருவரே இவ்வாறு காயமடைந்துள்ள நிலையில், கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிளில் சென்ற நபரை வெட்டிக் காயப்படுத்திய சந்தேக நபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், அவர்களை கைது செய்ய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும், சம்பவ இடத்துக்கு வருகைதந்த கல்முனை தலைமையக பதில் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியும் குற்றப்புலனாய்வுப் பிரிவு பொறுப்பதிகாரியுமான பிரதம பொலிஸ் பரிசோதகர் அலியார் றபீக் தலைமையில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

உலக செய்திகள்

## நியூயோர்க்கை வசீகரித்த சூரிய அஸ்தமனம்



சூரிய உதயமும், அஸ்தமனமும் ஓடிக்கொண்டிருக்கும் மனித வாழ்கையை ஒருகணம் அமைதிப்படுத்தக் கூடியவை. அந்த மன அமைதியைத்தான் நியூயோர்க் வாசிகள் நேற்றுமுன்தினம் கடந்திருக்கிறார்கள்.

நியூயோர்க்கின் பரபரப்பான வீதிகளிலொன்று மன்ஹாட்டன். வானளவு உயர்ந்த கட்டடங்களால் உலகளவில் பெயர்பெற்றது. இதில் மன்ஹாட்டனின் முக்கிய வீதிகளில் நேற்றுமுன்தினம் மாலை ஆயிரக்கணக்கான மக்கள் கூடி இயற்கையின் கண்கொள்ளாக் காட்சியை தங்களது கைபேசிகளில் பதிவுசெய்திருக்கின்றனர். காரணம், மன்ஹாட்டனின் பிரமாண்ட - உயர்ந்த கட்டடங்களுக்கு மத்தியில் பிரமாண்ட சூரியன் மெல்ல மெல்ல மறைந்து கொண்டிருந்தது. சிவப்பு - செம்மஞ்சள் நிற வண்ணத்தால் வண்ணமிடப்பட்ட வானத்தில் பெரிய நெருப்புப் பந்துபோல் சூரியன் கட்டடங்களின் மத்தியில் கீழ் சென்றுகொண்டிருந்தது.

இதனால் மன்ஹாட்டனில் சூரியன் மறையும் புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் வைரலாகின. பூமி எப்போதும் நேராக சுழல்வதில்லை. 23 டிகிரி அச்சில் சாய்வாகத்தான் பூமி சுழல்கிறது. இதனால் தான் நாம் பருவ மாறுதல்களை மாறி மாறி சந்திக்கிறோம். இவ்வாறு சாய்வாக சுழலும்போது உலக நாடுகளில் சில பகுதிகளில் சூரியனின் அஸ்தமனங்களும், உதயங்களும் இவ்வாறு பிரமாண்டமாக கண்கொள்ளாக் காட்சியாக அமைவதென்று வானியல் நிபுணர்கள் கூறுகின்றனர். இம்மாதிரியான சூரிய அஸ்தமனம் ஜூலை மாதம் மீண்டும் நிகழுமென்று அவர்கள் தெரிவிக்கின்றனர்.

# எல்-சால்வடோர் சிறையில் 153 கைதிகள் உயிரிழப்பு

## சித்திரவதை - பட்டினியால் கொல்லப்பட்டிருப்பதாக சர்வதேச மனித உரிமைகள் அமைப்பு குற்றச்சாட்டு



எல்-சால்வடோரில் அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட 153 பேர் சித்திரவதைக்குட்படுத்தப்பட்டு, பட்டினியால் உயிரிழந்துள்ளதாக மத்திய அமெரிக்க மனித உரிமைகள் அமைப்பான 'கிறிஸ்டோசல்' (Cristosal) தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில்,

அவசரகாலச் சட்டத்தின் கீழ் கடந்த 2022ஆம் ஆண்டு வழங்கப்பட்ட சிறப்பு அதிகாரத்தின் கீழ் இதுவரை கைதுசெய்யப்பட்ட ஆயிரக்கணக்கானவர்களில் 153 பேர் பல்வேறு சிறைகளில் உயிரிழந்துள்ளனர்.

அவர்களில் பலர் சித்திரவதை தாங்க முடியாமலும், மோசமான காயங்களாலும் உயிரிழந்துள்ளனர். உயிரிழந்த பலருக்கு மருத்துவ வசதி மறுக்கப்பட்டிருப்பதும் சிலர் பட்டினிச்சாவு அடைந்திருப்பதும் ஆய்வில் தெரியவந்துள்ளது.

இதில் 29 பேர் கடும் சித்திரவதைக்குட்படுத்தப்பட்டும் 46 பேர் சந்தேகத்துக்கிடமான முறையிலும் 75 பேர் அடித்து கழுத்துநெரிக்கப்பட்டும் உயிரிழந்திருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

எனினும், உயிரிழந்த ஒருவர் மீது கூட எந்தவித குற்றச்சாட்டும் பதிவுசெய்யப்படவில்லை. உயரதிகாரிகளின் உத்தரவில்லாமல் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதற்கான வாய்ப்பில்லை என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

போதைப்பொருள் கடத்தல் கும்பல்களை ஒடுக்குவதற்காக தற்காலிகமாகக் கொண்டுவரப்பட்ட அவசரகாலச் சட்டத்தை அந்நாட்டு ஜனாதிபதி நயீப் புக்கேலே (Nayib Bukele) அரசு தொடர்ந்து அமுல்படுத்தி வருகிறது.

இந்தச் சட்டத்தின் கீழ் 68 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கைதுசெய்யப்பட்டதாகவும் அவர்களில் குற்றச்சாட்டு நிரூபிக்கப்படாமல் சுமார் 5,000 பேர் மட்டுமே விடுவிக்கப்பட்டதாகவும் அரசின் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தச் சட்டத்தை சர்வதேச மனித உரிமைகள் கண்டித்து வந்தாலும் இந்த விவகாரத்தால் அந்நாட்டு ஜனாதிபதி புக்கேலேவுக்கு எல்-சால்வடோர் மக்களிடையே நல்ல ஆதரவு நிலவி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## நடுவானில் வெடித்து சிதறியது வடகொரிய உளவு செயற்கைக்கோள்



வடகொரியாவின் முதல் உளவு செயற்கைக்கோள் ஏவும் முயற்சி தோல்வியில் முடிந்துள்ளதாக அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது.

இதுகுறித்து அந்நாட்டு மத்திய செய்தி நிறுவனம் வெளியிட்டுள்ள தகவலில்,

வடகொரியாவின் முதல் உளவு செயற்கைக்கோள் ரொக்கெட் மூலமாக நாட்டின் வடமேற்குப் பகுதியான டாங்சாங்-ரி பகுதியிலிருந்து விண்ணில் ஏவப்பட்டது. முதல் மற்றும் இரண்டாம் கட்ட சோதனைகளில் இந்த ரொக்கெட் பல பிரச்சினைகளைச் சந்தித்து நடுவானில் வெடித்து கொரியாவின் மேற்கு கடல் பகுதியில் வீழ்ந்தது.

ரொக்கெட் விண்ணில் ஏவப்படுவதையடுத்து தென்கொரிய தலைநகர் சியோலில் பொதுமக்கள் பாதுகாப்பான பகுதிக்கு மாற்றப்பட வேண்டுமென்று எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. ஆனால், ரொக்கெட் ஏவப்பட்டதில் எதிர்பாராத விபத்து ஏற்பட்டதால் அந்த எச்சரிக்கை திரும்பப் பெறப்பட்டது.

நீண்டதூர ஏவுகணை தொழில் நுட்பத்தை வடகொரியா பயன்படுத்துவதற்கு ஐ.நா. தடை விதித்துள்ளது. ஐ.நாவின் உத்தரவை மீறி நீண்ட தூர ஏவுகணை தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி வடகொரியா உளவு செயற்கைக்கோளை விண்ணில் ஏவும் முயற்சி தோல்வியில் முடிந்துள்ளது. முன்னதாக வடகொரியாவில் உளவு செயற்கைக்கோள் ஏவப்படுவதை அறிந்து ஜப்பான் அரசு வடகொரியாவின் உளவு செயற்கைக்கோள் ஜப்பான் எல்லைக்குள் வந்தால் சுட்டு வீழ்த்தப்படும் என்று அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சூடானில் மேலும் ஒருவாரகால போர் நிறுத்த ஒப்பந்தம் அமுல்

சூடானில் மேலும் ஒருவாரகாலம் போர் நிறுத்தம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு அந்நாட்டு இராணுவமும் துணை இராணுவமும் ஒப்புக்கொண்டுள்ளன.

வடகிழக்கு ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான சூடானில் இராணுவத்திற்கும் அதிவிரைவு துணை இராணுவப் படையினருக்கும் கடந்த ஏப்ரல் 15ஆம் திகதி முதல் போர் நடைபெற்று வருகிறது. இராணுவ ஆட்சிக்கு எதிரான துணை இராணுவப் படையினர் திடீரென போர்க்கொடி தூக்கியதால் இந்த மோதல் வெடித்தது. கடந்த ஒன்றரை மாதங்களாக நீடித்துவரும் உள்நாட்டு மோதலில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். 10 இலட்சம் பொதுமக்கள் நாட்டை விட்டே வெளியேறி அண்டை நாடுகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

உள்நாட்டுப் போரால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்கும்பொருட்டு அமெரிக்காவும் சவூதியும் சமரச முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. ஏற்கனவே கடந்த 22ஆம் திகதி முதல் 7 நாட்கள் போர் நிறுத்த ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள நிலையில், நேற்றுமுன்தினம் மேலும் 5 நாட்கள் போர் நிறுத்தம் செய்துகொள்ள சூடான் இராணுவமும் துணை இராணுவப்படையும் ஒப்புக்கொண்டுள்ளன. இதனால் துப்பாக்கிச் சத்தம் தற்காலிகமாக ஓய்ந்துள்ளது.

## இராணுவ விளையாட்டுகளில் சிறந்த பங்களிப்பிற்காக விமானப்படை தளபதிக்கு புதிய கௌரவம்



இலங்கை விமானப்படைத் தளபதியும் பாதுகாப்புச் சேவைகள் விளையாட்டுச் சபையின் தற்போதைய தலைவருமான எயார் மார்ஷல் சுதர்சன பத்திரனவுக்கு சர்வதேச இராணுவ விளையாட்டு கவுன்சிலினால் CISM ஆர்டர் ஆஃப் மெரிட்டின் அதிகாரி என்ற பட்டம் கடந்த திங்களன்று ஓய்வுபெற்ற பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் கமால் குணரத்னவால் பாதுகாப்பு அமைச்சில் வைத்து வழங்கி கௌரவிக்கப்பட்டது.

விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் சுதர்ஷன பத்திரன இலங்கை ஆயுதப் படைகளின் விளையாட்டு வளர்ச்சிக்கு சிறந்த பங்களிப்பை வழங்கியுள்ளதுடன், பாதுகாப்புச்சேவைகள் விளையாட்டுச் சபையின் தலைவர் என்ற வகையில் பாதுகாப்பு சமூகத்தில் விளையாட்டுகளை வளர்ப்பதற்கும் - மேம்படுத்துவதற்கும் விசேட கடமையை ஆற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஆசியக்கிண்ணம் 2023: முடிவின்றி நிறைவடைந்த பேச்சு

ஆசியக்கிண்ண தொடரை நடத்த இலங்கை கிரிக்கெட் சபை முன்வைத்துள்ள புதிய யோசனை பாகிஸ்தானை பேரிடியாக தாக்கியுள்ளது. ஆசிய கிண்ண கிரிக்கெட் போட்டியை இரண்டு நாடுகளில் நடத்துவதற்கான திட்டம் ஒன்றை பாகிஸ்தான் முன்வைத்திருந்தது. ஆனால், அதற்கு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை உடன்படவில்லை.

ஆசிய கிண்ணப் போட்டியை எங்கு? எப்போது? நடத்துவது என்பது குறித்து அஹமதாபாத்தில் விசேட பேச்சுவார்த்தை ஒன்று நடத்தப்பட்டது. ஆனால், அந்தப் பேச்சுவார்த்தையில் ஒரு முடிவு எடுக்கப்படவில்லை. யோசனைகள் மாத்திரமே முன்வைக்கப்பட்டுள்ளது. நரேந்திர மோடி விளையாட்டரங்க கேட்போர்கூடத்தில் ஆசிய கிரிக்கெட் பேரவைத் தலைவர் ஜெய் ஷா தலைமையில் நடைபெற்ற அக் கூட்டத்தில் இந்தியா, இலங்கை, பங்களாதேஷ் உட்பட ஆசிய கிரிக்கெட் பேரவையில் அங்கம் வகிக்கும் நாடுகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டிருந்தனர்.

பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் நஜாம் சேதி மாத்திரமே இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை. இலங்கை சார்பாக இலங்கை கிரிக்கெட் தலைவர் ஷம்மி சில்வா, பொதுச் செயலாளர் மொஹான் டி சில்வா, பிரதம நிறைவேற்று அதிகாரி ஏஷ்லி டி சில்வா ஆகியோர் இக் கூட்டத்தில் பங்குபற்றினர்.





2023ஆம் ஆண்டுக்கான ஐ.பி.எல். கிண்ணத்தை சென்னை சுப்பர் கிங்ஸ் அணி கைப்பற்றிய நிலையில், சென்னை தி.நகரிலுள்ள திருப்பதி தேவஸ்தானத்துக்கு வெற்றிக்கிண்ணம் எடுத்துச் செல்லப்பட்டு சிறப்பு பூஜை செய்யப்பட்டது.

## சவூதியில் ரொனால்டோவை விட இரு மடங்கு சம்பளம் பெறவுள்ள மெஸ்ஸி



சவூதி அரேபியாவின் அல்-ஹிலால் அணிக்காகக் களமிறங்க லியோனல் மெஸ்ஸி ஒப்புக்கொண்டுள்ளதாகவும் 1 பில்லியன் பவுண்டுகள் தொகைக்கு ஒப்பந்தம் உறுதி செய்யப்பட்டுள்ளது என்ற தகவலும் வெளியாகியுள்ளது.

மெஸ்ஸி பிரான்ஸின் பி.எஸ்.ஜி. அணிக்காக சனிக்கிழமை கடைசி ஆட்டத்தில் களமிறங்க இருக்கிறார். தகவல் ஏதும் தெரிவிக்காமல் சவூதிக்குச் சென்றதால் பி.எஸ்.ஜி. நிர்வாகம் மெஸ்ஸியை இடைநீக்கம் செய்த பின்னர் முதன் முறையாக வரும் சனிக்கிழமை விளையாடவுள்ளார். ஆனால், அதுவே அவரது கடைசி ஆட்டம் எனவும் கூறப்படுகிறது.

இந்த நிலையில், தான் சவூதி அரேபியாவின் அல்-ஹிலால் அணிக்காக லியோனல் மெஸ்ஸி களமிறங்க இருக்கிறார் என்ற தகவல் கசிந்தது. முதலில் மெஸ்ஸி தரப்பு மறுத்தாலும், தற்போது பிரான்ஸ் பத்திரிகை ஒன்று குறித்த தகவலை உறுதி செய்துள்ளது. அதாவது, ஆண்டுக்கு 500 மில்லியன் பவுண்டுகள் என இரண்டு ஆண்டுகளுக்கு அல்-ஹிலால் நிர்வாகம் மெஸ்ஸியை ஒப்பந்தம் செய்துள்ளதாகவும் மெஸ்ஸி தரப்பில் அந்தத் தொகைக்கு ஒப்புக்கொண்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

ஆனால், இந்த் தொகையானது அல்-நஸ்ஸர் அணிக்காக கிறிஸ்டியானோ ரொனால்டோ வாங்கும் தொகையை விட இரு மடங்கு அதிகம் என்றே தெரியவந்துள்ளது.

விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

## சொக்கர் மாஸ்டர்ஸ் சம்பியனானது டயமண்ட்ஸ் அணி





வடமராட்சியில் 40 வயதுக்கு மேற்பட்ட வீரர்களைக் கொண்ட கழகங்களுக்கிடையில் வல்வை விளையாட்டுக்கழகம் நடத்திய சொக்கர் மாஸ்டர்ஸ் சம்பியன்ஷிப் போட்டியில் கரணவாய் கொலின்ஸ் கழகத்தை எதிர்த்து விளையாடிய வதிரி டயமண்ட்ஸ் அணி 4-3 எனும் கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனாகியது.

தீருவில் விளையாட்டுக்கழக மைதானத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இறுதிப் போட்டியில் ஆட்டம் ஆரம்பித்து சில நிமிடங்களிலேயே அரவிந்தன், ரமணன் ஆகியோரின் கோல்களுடன் டயமண்ட்ஸ் 2:0 என்ற கோல்கணக்கில் முன்னிலை வகித்தது. பதிலுக்கு ராஜாவின் அதிரடி இரட்டைக் கோல்களுடன் 2 - 2 என்ற கோல் கணக்குடன் முதல் பாதியாட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

இரண்டாவது பாதியாட்டத்தில் பெனால்ரியில் கிடைத்த கோல் மூலம் 3 - 2 என்ற கோல்கணக்கில் டயமண்ட்ஸ் முன்னிலை வகித்தது. பதிலுக்கு அடுத்த சில நிமிடத்திலேயே கொலின்ஸ் அணியின் ராஜா தனது அணிக்கான மூன்றாவது கோலினை அடிக்க 3:3 என்ற கோல்கணக்கில் ஆட்டம் சமனிலை பெற்றது. போட்டி முடிவடையும் நிலையில் ரமணன் அடித்த வெற்றிக் கோலுடன் டயமண்ட்ஸ் சம்பியனாகியது.

கிண்ணத்தைக் கைப்பற்றிய டயமண்ட்ஸ் அணிக்கு வெற்றிக்கிண்ணத்துடன் ரூபா 50 ஆயிரம், ரன்னர் அப்பான கொலின்ஸ் அணிக்கு வெற்றிக்கிண்ணத்துடன் ரூபா 30 ஆயிரம் பணப்பரிசிலும் வழங்கப்பட்டது.

## கந்தளாய் அல் - ஜாயா விளையாட்டு கழகத்திற்கு மேலங்கிகள் கையளிப்பு

**(கந்தளாய் செய்தியாளர்)**



திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் ஏ.சி.எம். ஜவாஹிரின் நிதியுதவி மூலம் கந்தளாய் அல் - ஜாயா விளையாட்டுக் கழகத்திற்கு உதைபந்தாட்ட விளையாட்டுக்கான மேலங்கிகள் விளையாட்டுக் கழக வீரர்களிடம் அண்மையில் கையளிக்கப்பட்டன.

கந்தளாய் அல் - ஜாயா விளையாட்டு வீரர்களினால் கந்தளாய் பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் ஏ.சி.எம்.ஜவாஹிரிடம் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க இவ்வாறு மேலங்கிகள் வழங்கி வைக்கப்பட்டன. இதன்போது அல் - ஜாயா விளையாட்டுக் கழக முக்கியஸ்தகர்கள் உட்பட விளையாட்டு வீரர்கள் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7